230

230
1·53

மாதர்வேளூர் தேவஸ்தான வெளியீடு.

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
23 JAN 1953
MADRAS



# மாதர்வேளூர் என்னும்

# மாதலீபுரமகாத்மியம்

இஃது
தஞ்சை சரஸ்வதி மஹாலில் இருந்த
தமிழ் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பிரதிக்கிணங்க

ஷை தேவஸ்தான பரிபாலகர்கள்
மாதர்வேளூர் ஸ்ரீ V. சுப்பராயஅய்யர்,
பூங்குடி ஸ்ரீ C. சிவலோகமுதலியார்
இவர்களால் தேவஸ்தான நிதியைக் கொண்டு

சீகாழி வித்வசிகாமணி
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களின்
மாணாக்கருள் ஒருவராகிய
சீகாழி K. சுப்பையாபிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

சீகாழி [illegible] பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.
1952 [விலை அணா 8.

Q2:38.J1193
N52
109665

மாதர்வேளூர் தேவஸ்தான வெளியீடு.



# மாதர்வேளூர் என்னும்

# மாதலீபுர மகாத்மியம்.

இஃது

தஞ்சை சரஸ்வதி மஹாலில் இருந்த

தமிழ் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பிரதிக்கிணங்க

ஷை தேவஸ்தான பரிபாலகர்கள்

மாதர்வேளூர் ஸ்ரீ V. சுப்பராயஅய்யர்,

பூங்குடி ஸ்ரீ C. சிவலோகமுதலியார்

இவர்களால் தேவஸ்தான நிதியைக் கொண்டு

சீர்காழி வித்வசிகாமணி

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களின்

மாணாக்கருள் ஒருவராகிய

**சீகாழி K. சுப்பையாபிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

சீர்காழி குமரன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

**1952** [விலை அணா 8.

# முகவுரை.

மாதலீபுரம் என்பது காலப்போக்கில் மாதர்வேளூர் என்று மாறி அதன்படி இப்பொழுது தெரிகிற இந்த மாதர்வேளூர் கிராமம் தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலுக்காவில் கொள்ளிடம் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து மேற்கே 5-மைல் தூரத்தில் இருக்கிறது.

இதில் இருக்கிற சிவ, விஷ்ணு ஆலயங்களைப் பற்றி இந்த ஸ்தலத்திற்கு எற்பட்டிருக்கிற புராணம் தஞ்சை சாஸ்வதி மஹாலில் இருந்து வருகிற எட்டுப் பிரதிகளில் 12 அத்யாயங்களாக விஸ்தாரமாக இருக்கிறது. தேவஸ்தான போர்டார் விருப்பத்தின்படி ஷை புராணம் பொது ஜனங்களுக்கு எளிதில் புரியும்படி சுருக்கமாக அச்சிடப்பட்டு இருக்கிறது. மாதலீஸ்வரஸ்வாமி கோவில் கர்ப்பக் கிருகத்தில் வெளிப்புறம் தக்ஷிணாமூர்த்தி சன்னதி முதல் சுப்பிரமணியஸ்வாமி சன்னதி வரையில் இருக்கும் கல் வெட்டுகளைக் கொண்டு இந்த ஆலயம் ராஜராஜசோழனால் புதுப்பிக்கப்பெற்று மானியம் விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த மானியத்துக்காக இப்பொழுதும் கவர்மெண்டார் பூஜை மோஹினியாக ரூ. 26—4—0 கொடுத்து வருகிறார்கள்.

இந்த க்ஷேத்திரத்தின் முக்கிய விசேஷம் கொள்ளிட நதியில் மடுவில் ஏராளமாக முதலைகள் இருந்தாலும் மனிதர்களை இம்சிப்பதில்லை. சுவாமி சன்னதிக்கு வலது பாகத்தில் அம்பாள் சன்னதி அமைந்து இருக்கிறது. ஸ்தல விருக்ஷம் பாதிரிமரம் அம்பாள் சன்னதிக்குத் தென் புறத்தில் இருக்கிறது. பட்டுப் போகும் தருவாயில் கீழ்

இலை உற்பத்தியாகி மாருமல் இருந்து வருகிறது. இதற்கு உத்தரஹாலாஸ்யம் (வடமதுரை) எனப் பெயர் வழங்கு கிறது. சுவாமி சன்னிதியின் வலப்பக்கத்தில் அம்மன் சன்னிதி இருப்பதால் இதுவும் மதுரை கோவில் கட்டிய பாண்டிய அரசராலேயே கட்டப்பட்டிருக்க வேணு மென்று ஒருவாறு அறியலாம். சமீப காலம் வரை இத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அபயங்கரதேவருக்கும் ஸ்ரீமாதலீசுவருக்கும் பிரமோசவம் நடைபெற்று வந்திருப்பது ஷை கோவில்களிலுள்ள பழைய வாகனுதிகள் முதலியவற்றிலிருந்து தெரிகிறது.

இப்போது நடைபெறும் உற்சவம் கருடபஞ்சமி யன்று நடைபெறும் தீர்த்தோற்சவம் ஒன்று தான்.

மகாஜனங்கள் ஷை கோவில் பூஜை, உற்சவம் முதலியவைகளுக்கு வேண்டிய நிதி உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

**டிரஸ்டிகள்.**

இறைவன் துணை.

# சிறப்புப்பாயிரம்.

மாதர்வேளூர் என்னும் மாதலீபுர மகாத்மியத்தை அவ்வூர்த் திருக்கோயில் அறநிலையத் தலைவர்களாகிய V. சுப்பராயஐயர் அவர்களும் சிவலோகமுதலியார் அவர்களும் மிக முயன்று சீர்காழி K. சுப்பையாபிள்ளை அவர்களால் உரைநடையில் எழுதுவித்து வெளியிடுகின்றனர். அன்னாரின் கடவுள் அன்பும் முயற்சியும் மிகவும் பாராட்டற் குரியன.

"மாதலீபுர மகாத்மியம்" என்பது மாதலீபுரத்தின் பெருமை என்று பொருள்படும். ஒரு தலத்தின் வரலாற்றைக் குறித்த செய்திகளைப் 'புராணம்' என்னும் பெயரால் பிற்காலத்தார் வெளியிட்டனர். புராணம் என்ற சொற்குப் பழமை, பழங்கதை என்று பொருள் கூறலாம். இதனால் பழங்கதைகளைக் கூறும் பனுவல்களையெல்லாம் புராணம் என்று வழங்குதல் பொருந்துமாயினும் "உலகத் தோற்றம், உலக வொடுக்கம், மன்வந்தரம், முனிவர் வல்லமை, அரசர் மரபு" என்னும் ஐந்தினைக் கூறுவதே புராணமா மென்பர் வடநூலாசிரியர். அவ்வடநூலாசிரியர் கூறும் புராண இலக்கணத்தைக் கருதினால் தமிழ் நாட்டி லெழுந்த தலபுராணங்களெல்லாம் புராணம் என்று அழைத்தற்குத் தகுதியிலவாம் என்பது நன்கு புலப்படும்.

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எட்டும் தொடர்நிலைச் செய்யுளின் வனப்பாகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. அவ்வெட்டில் 'தொன்மை' என்பது ஒன்று.

†அத்தொன்மை உரையொடு பொருந்தி பழமைத்தாகிய பொருண்மேல் வரும். இத்தொன்மை இலக்கணத்தைப் பெற்று வருபவை தாம் தமிழ் நாட்டுத் தலபுராணங்கள். அந்த முறையில் அமைந்தது நமது மாதலீபுர மகாத்மிய மாகும்.

"நம் நாட்டுப் புராணங்களெல்லாம் நம்ப முடியாத புனைந்துரைகளைப் பெற்றிருக்கின்றன; இப்புனைந்துரைகளைக் கற்ருல் நம் பகுத்தறிவுணர்ச்சி பாழ்பாடும்" என்று சிலர் கூறி வருகின்றனர். அவர் கூறுவதை ஆராய்ந்துணரும் அறிவு வன்மையில்லாத பலர் அவர் கூற்றை அப்படியே நம்பிப் 'புராணம்' 'மகாத்மியம்' என்ருல் எள்ளி நகையாடி ஒதுக்குகின்றனர். அங்ஙனம் அவர்கள் எள்ளும் புராண கதைகளைப் பற்றித் தமிழ் நாட்டறிஞர்க்குச் சில கூற யான் விழைகின்றேன்.

நல்லாசிரியன் ஒருவன் தன் மாணக்கருக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்குங்கால் அவன் அக்கல்வியை அவருக்குப் பல்வழிகளாலே சொல்லிக் கொடுப்பான் அல்லவா? அப்பல வழிகளில் சிறந்ததொன்று கதைகளைக்கூறி அவற்ருல் கல்வி கற்பிப்பதாகும்; அங்ஙனம் கூறப்படுகின்ற கதைகள் உண்மையாகவு மிருக்கலாம்; எப்பொழுதும் கற்பனை பெய்துரைக்கப் பெருத கதைகள் அவ்வளவு நன்ருயிருப்பதில்லை. ஆகையினுற்ருன் தொன்று தொட்டே நல்லிசைப் புலவர்களெல்லாம் தாங்கள் இயற்றும் நூல்நெறி வழக்கிற்குக் கற்பனையாகிய நாடக வழக்கினையும் உள்ளனவாகிய உலகியல் வழக்கினையும் உறுப்பாகக் கொண்டுள்ளார்கள். "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்பாடல் சான்ற புலன் நெறி வழக்கம்" என்பது

---

† தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.
தொல்காப்பியம். பொருள் 549 சூ.

தொல்காப்பியம். இதனுள் புலன் நெறி வழக்கம் என்றது நூல் நெறி வழக்கமாகும்.

அதுவு மன்றியே தற்காலப் பாட புத்தகங்களிலும் எத்தனையோ கற்பனைக் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. முயலானது சிங்கத்தை ஏமாற்றிக் கொன்றதென்றும்; நரி யொன்று நாரை யொன்றிற்கு விருந்து செய்து ஏமாற்றியதைப்போல நாரையும் நரிக்கு விருந்து செய்து ஏமாற்றிய தென்றும் பாட புத்தகங்களில் படிக்கிறோம். இக்கதைகளெல்லாம் வெறும் புனைந்துரையாகவிருக்கினும் அவைகளெல்லாம் நமக்குச் சிறந்த சிறந்த நீதிகளைப் புகட்டுவதால் நாம் அக்கதைகளை விரும்பிக் கற்கிறோம்; அங்ஙனம் அக்கதைகள் உணர்த்தும் நீதிகளைக் கருதாது இது புனைந்துரை! கட்டுக்கதை! என்றொருவன் கூறிக்கொண்டிருப்பானே யானல் அம்மகனின் செயலை யார்தான் மதிப்பர். நம்மாதலீபுர மகாத்மியத்தைப் படித்தால் அதில் பல நீதிகள் அடங்கி யிருப்பதை உணரலாம். ஹேமன் என்பவன் கடவுள் வழிபாடு செய்து கொண்டிருந்த மக்கள் கூட்டம் அஞ்சும்படி பொய்ப்பாம்பு கொண்டு விளையாடியதால் தீங்குற்றதும், சித்திரசேனனும் மஞ்சுகோஷை என்பாளும் பெரியாரொருவரை இகழ்ந்துரைத்ததால் தீங்குற்றதும், சுருசி என்னும் அந்தணனிடம் அன்ன தானம் செய்யும்படிப் பொதுமக்கள் பொருளினைக் கொடுக்க, அவன் அங்ஙனம் செய்யாது அப்பொருளைக் கொண்டு தன் உறவினர்களுக்கு மட்டும் உணவாதிகள் கொடுத்துவந்த பாவத்தால் அடுத்த பிறப்பில் சூலைநோயுற்றதும் ஆகிய பல அறங்களைப் புகட்டுகின்றன அல்லவா? இவை போலவே அறவழியில் நின்றோர் நன்னிலையில் வாழ்ந்த கதைகளும் காணப்படுகின்றன.

இந்நூல் போன்ற நூல்கள் ஒவ்வொரு தலத்திற்கும் வெளிவருவதற்கான முயற்சிகளை மற்ற அறநிலையத்தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

தெளிந்த இனிய தமிழ் நடையில் இந்நூலை ஆக்கித் தந்த ஆசிரியர் திரு. **K. சுப்பையாபிள்ளை** அவர்கள் இம்மை மறுமைக்கான புகழ் புண்ணியம் இரண்டையும் பெற்றுள்ளார்.

"அரன் நாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே."

**புலவர்மணி S. ராமச்சந்திரப்பத்தர்** B. A.,
டிப்டி தாசில்தார், தஞ்சை.

---

**சாற்றுக்கவி.**

சீரார்கொள் விடநதியின் தென்கரையிற் சிறந்துளநற்
சிவனார் மேவும்
ஏரார்மா தலிபுரத்தின் மான்மியத்தை இன்தமிழில்
இயற்று கென்று
தேராரக் கோவில்பரி பாரகராம் சுப்பராயச்
செம்மல் தானும்
காரார்பூங் குடிவாழ்நற் சிவலோகச் சீமானும்
கலந்து கேட்க.

முன்னூலைக் கொண்டினிய உரைநடையில் எழுதிநன்கு
முற்றச் செய்தோன்
எந்நூலும் கற்றமுத்துத் தாண்டவர்பால் என்னுடன்பல்
இயல்நூல் கற்ருேன்
தொன்னூலைக் கற்பதிலும் கேட்பதிலும் பெருவிருப்பன்
தூயோர் நேசன்
நன்னூலிற் கூருசான் நவில்காழிச் சுப்பைய
நாமத் தோனே.

**வித்வான் D. சுந்தரேசன்,**
தலைமைத் தமிழாசிரியர்,
எல். எம். ஸி. உயர்நிலைப்பள்ளி.

சீர்காழி
8—11—'52.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாதலீபுர மகாத்மியம்.

## காப்பு.

மாது பாகனும் மாலுடன் மன்னிய
மாத லீபுர மான்மியம் செப்பிட
ஏதம் நீக்கி இலங்குமெத் தேவர்க்கும்
ஆதி தேவனும் ஐங்கரற் போற்றுவாம்.

## மூத்தபிள்ளையார்.

அறிவொளி பயக்கும் மேனியும் உயிர்கட்
கைந்தொழி லுதவுமைங் கரமும்
செறிவொளி வளர்க்குங் காற்றினை யுதவும்
செவிகளும் இணையிலா வின்ப
நெறியொளி கொடுக்கும் நிகரிலா முடியும்
நிச்சலும் அன்புசெய் பவர்க்கே
குறியொளிர் அருளாந் திருவடி கொண்ட
குஞ்சரம் வாழ்கஎன் னுளத்தே.

## மாதலீஸ்வரர்.

பரையொடு விளங்கி அருளினைப் பயந்து
பகர்தரும் இச்சையே முதலா
உரைதரு மூன்று சத்தியை உதவி
உளமுதற் காரண மாகி
நிரைதரு மாயை தன்னிலே அவற்றால்
நீள்தரு வுலகெலாந் தோற்றும்
விரைதரு மலர்சூழ் மாதலீ புரத்து
விமலனார் திருவடி போற்றி.

## மீனாட்சியம்மை.

அன்பினை விளைக்கும் தொண்டர்கள் தமக்கே
அருளினை மழையெனச் சொரிந்தும்
இன்பினை விளைக்கும் இறைவனார் தமக்கே
இணையிலாக் காதலைப் பொழிந்தும்
துன்பினை விளைக்குந் தீயவர் தமக்குத்
துரிசறு சினத்தையே விளைத்தும்
நண்பினை விளைக்குங் கயலெனுங் கண்ணி
நற்றிரு வடிமலர் பணிவாம்.

## முருகப்பெருமான்.

காமனும் மயங்கு வனப்பினைப் பெற்றே
களரையிலாப் பெருமணம் புரிந்தே
சோமனும் கதிரும் போக்குமா விருளைச்
சோர்ந்திடச் செயுமொளி படைத்தே
பூமனும் ஒளிசேர் மாமனும் காணாப்
பூரணற் கொருபொரு ளுரைத்தே
பாமனும் புகழ்சேர் மாதலீ புரம்வாழ்
பரமவே லவனடி பணிவாம்.

## நடராஜர்.

பரத்துவ மான சிவபரம் பொருளின்
பண்பினை விளக்கவைந் தொழில்செய்
கருத்தனுய்த் தானே சிவதலந் தோறும்
கலந்துள்ளான் என்பதைக் காட்டும்
கருத்தொடம் பலத்தில் நடித்திடல் அன்றிக்
கவின்பெறு மாதலீ புரத்தும்
நிருத்தம தாற்றி யிலங்கிடுந் தேவே
நின்மலர்ச் சரணமக் கரணே.

### சிவகாமசுந்தரி.

சத்தியே யன்றிச் சிவமிலை என்னுந்
தனித்ததோர் உண்மையைக் காட்ட
நித்தமிவ் வுலகம் தொழிற்பட இயக்கும்
நின்மலன் தனதிடம் கொண்டும்
சித்தம துற்றும் அவனையம் பலத்தில்
செவ்வனே நடித்திட இயக்கும்
உத்தர மதுரை மாதலீ புரம்வாழ்
உயர்சிவ காமிதாள் பணிவாம்.

### தக்ஷிணாமூர்த்தி.

குருவரு ளின்றி இறையருள் நமக்குக்
கூடுத லரிதென மக்கள்
கருவுரு வண்ணம் நன்னெறி யுற்றுக்
கருதுபே ரின்பம துறுவான்
திருவருள் கொண்டு நால்வருக் கென்று
தக்ஷிணா மூர்த்தியா யன்று
வருபரன் தனது திருவடி வாழ்த்தி
வந்தஇப் பிறப்பைவாழ்த் துவமே.

### அபயங்கரதேவர்.

இன்றுதோன் றிட்ட தாமரை மலர்போல்
எழில்பெறு திருமுகம் விளங்க
நன்றுதோன் றிட்ட கரமெனு முகில்மேல்
நற்கதிர் திங்களே யென்ன
வென்றுதோன் றிட்ட ஆழியும் சங்கும்
விளங்கிடத் தொண்டர்கள் தமக்கே
நின்றுதோன் றிட்ட அபயநற் கரத்தர்
நீளடி நினைந்துவாழ் குவமே.

## சாத்தனூர்.

சிந்தனைக் கரிய சிவபரம் பொருளும்
சிறப்புறு மாலுமே சேர
வந்தனைக் குரிய தேவனய் வந்து
வையகத் தவர்துயர் தீர்த்தே
கந்தினை முரிக்கும் யானைமேற் கொண்டு
களிப்புடன் மாதலீ புரம்வாழ்
சந்தினை யணியும் சாத்தனு ரடிகள்
சார்ந்துபன் னளும்வாழ்த் துவமே.

## வீரகாளி.

பாரெலாம் வாழக் காலமே தோன்றிப்
பாங்கெலாம் மின்னினை வீசிச்
சீரெலாம் பொலியத் திசையுற முழங்கிச்
சிறப்புறு மழையினைச் சொரியுங்
காரெலாந் திரண்ட காட்சிசேர் வடிவங்
கவினுறக் கொண்டுமா தலிவாழ்
தாரெலாம் விளங்கு வீரகா ளியின்நற்
ருளிணை மனமுறப் பணிவாம்.

## நூற்பயன்.

மாத லீபுர மான்மிய மாமிதைக்
காத லோடென் றும் கற்பவர் கேட்பவர்
ஏதம் நீங்கிய இம்மைப் பயனுடன்
ஓதும் அம்மைப் பயனும்பெற் றுய்வரே.

# மாதர்வேலூர் ஸ்ரீமாதலீஸ்வரஸ்வாமி கோவிலில் 1918-ம் வருஷத்தில் எடுத்த கல் வெட்டு விபரம்.

:o:

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீஇராஜ இராஜ தேவருக்கு ஆண்டு பத்தொன்பதாவது நாயிற்று அமர பக்ஷத்து திருதியை புதன்கிழமையும் பெற்ற ரேவதி நாள் இராஜாதிராஜ வளநாட்டு வெண் வரையூர் நாட்டு மாதுலி வேலூரான அகளங்கச் சருப் பெதி மங்கலத்து மகாசபையா ரெழுத்து.

2. நம்மூர் கணக்கு குன்ற முடையான் கண்டு நம்மூர் உடையார் மாதுலியவர் முடையார்க்கும் உடையார் விக்கிரம சோளீஸ்வர முடையார்க்கும் திரு அமுதும் திருப்பணிகளும் உள்ளிட்ட நிமித்தங்களுக்கு முடலாக காணியும் இரையிலியுமாக முன்னள் திருமுன்பு நீர் வார்த்துக் குடுத்த உடையார்.

3. மாதுலியவர் முடையார்க்கும் இவ்வூர் இரண் டாங் கட்டளையில் திருநாமத்துக்கு காணியான அழகிய கூத்த விளாகம் நிலம் அரையே மூன்று மாச் சின்னமும் உடையார் விக்கிரம சோளீஸ்வரமுடையார்க்கு மூன்றுங் கட்டளையிலும், நாலாங் கட்டளையிலும் விக்கிரம சோழ விளாகம் உள்ளிட்ட விளை.

4. (1½) உபசின்னமும். ஆக நெ. 111 சின்னத் துக்கு ஒட்டுப்படியால் இறுத்து வந்த நெல்லும் இந்நிலத் தாலே வந்த குடிமை காசும் கோயிற்றம் பெறும் உள் ளிட்ட வினியோகங்களும், நம்மூர் பொத்தகப்படி நிலம் நூற்றிருபத்து மூன்றே முக்காலே சின்னத்துக்கு தாம் பெற்று.

5. இருக்கிற நிலத்திலே முக்காடு இட்டு பேர் வழியே கூட்டிக்கொண்டு இறுத்து வந்தமையில் இவ்வூரில் பின்பு சொந்த விக்கிரம சோழ மங்கலமும், விக்கிரமசோழ நல்லூரும் நெ. 34 சின்னத்து உபாதியால் வந்த நிலஇவ்வூர் களிலே பேர்வழியே நிலமும் நெல்லுமாக கூடட்டி கடமை,

குடிமை கொயிற்றம் பெறு உள்ளிட்ட விநியோகங்கள் கொள்ளவும்.

6. நீக்கி வருகிற கெ. $22\frac{1}{8}$ சின்னத்துக்கு குடி விழக் காட்டு ஒபாதியால் நெ...................யே சின்னமும், இறையிலி தர்ம விச...................லி நீக்கி கொல்லை உட் பட்ட கெ. 6 ....................... சின்னத்திலும், விழுக்காடு இட்டு பேர்வழியே நிலமும் நெல்லுமர்க கூடட்டிக் கொண்டு கடமை குடிமை.

7. கோயிற்றம் பெறு உள்ளிட்ட விளியோகங்கள் கொள்ளவும் நீக்கி உள்ளூர்.......................$8\frac{1}{2}$ சின்னத்துக் கும் விழுக்காட்டு பாதியால் நெ......................யே சின்ன மும் இறையிலி இக்கொல்லை உட்பட்ட கெ. $67\frac{5}{16}$ வின் சின்னத்திலும் விழுக்காடு இட்டு பேர்வழியே நிலமும் நெல்லும் கூடட்டிக் கொண்டு கடமை குடிமை கொயிற் றம் பெறு.

8. உள்ளிட்ட விளியோகங்கள் கொள்ளவும். இந் நிலங்கள் இன் நாயன்மார்க்கு காசு கொள்ளா இறையிலி யாகவும் உடையார் விக்கிரம சோளீஸ்வரர் முடையார் ஸ்ரீ கோயிலும், திருமுற்றமும், நிச்ச குளமும், திருமடை விளாகமும், வளர் நிலங்களுக்கு உடலான சையில் தர்மிலி யாக கழித்த நெ........சின்னமும், ஆககெ. இரண்டரையே.

9. இரண்டு மாவின் சின்னமும், சந்திராதித்தவரை யும் செல்லக் கடவதாக சொன்னோம். இப்படி செய்த பணியால் ஊர்க் கணக்கு குன்ற முடையான் எழுத்து. இப்படிக்கு இவை பார்த்தாயான்................க் குடுத்தான் எழுத்து. இப்படிக்கு இவை பார்த்தாயான் திருக்கழிப் பாலை யுடையான் பட்டன் எழுத்து. இப்படிக்கு இவை யறிந்தான் திருமுத்து குன்ற நம்பி எழுத்து. இப்படிக்கு இவை வாதுலன் மாதேவ பட்டன் எழுத்து.

இப்படிக்கு கல்லிலும், செம்பிலும் எழுதியிருக்கிறது சகஹு 1157.
கிருஸ்துஹு 1234 — 1235.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# மாதலீபுர மகாத்மியம்.

## முதலாவது அத்தியாயம்.

## ஸ்தலவரலாறு.

முன்னொரு காலத்தில் நைமிசாரண்ய வாசிகளான சௌனகாதி முனிவர்கள், முனிபுங்கவரும், பிரமஞானியும், வேதசாஸ்திர விற்பன்னரும் சகல க்ஷேத்திரங்களினுடைய மகிமைகளையும் அறிந்தவரும் ஆகிய சூதமுனிவரைக்கண்டு அர்க்கிய பாத்திய ஆசமனீயங்களால் உபசரித்துப் பூசித்துத் தோத்தரித்து வணங்கி, "பிரமபுத்திரரே, புண்ணிய சொரூபியே, புராண இதிகாசங்களைச் சிரவணம் செய்கின்றவர் அடையும் பலன்களை நாரதமுனிவரால் சொல்லப்பட்டிருக்கிறதை நாங்கள் அறிவோம். ஆகையால் சகல க்ஷேத்திரங்களின் அருமை பெருமைகளை அறிந்த தாங்கள் ஸ்ரீ கைலாசபதியான சிவபெருமானும் ஸ்ரீ வைகுண்டவாசியான ஸ்ரீ மகாவிஷ்ணுவும் ஒருங்கே எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்களில் ஒன்றின் மகிமையை நாங்கள் உய்யும் பொருட்டும் இப்பூமண்டலத்திலுள்ள சகல ஆன்மாக்களும் தெரிந்து அவர்களைப் பூசித்து வணங்கி இஷ்ட சித்திகளைப் பெறும் பொருட்டும் இப்போது எங்களுக்கு உபதேசித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

இவ்வாறு சத்விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் கேட்ட முனிவர்களைப் பார்த்து, "முனிசிரேஷ்டர்களே, நீங்கள் இவ்வளவு ஆவலாகவும் பக்தி சிரத்தையுடனும் கேட்பதால் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று முக்காலங்களையும் உணர்ந்த சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

இப்பூமண்டலத்தில் எண்ணிறந்த சிவஸ்தலங்களும் விஷ்ணுஸ்தலங்களும் உள. ஆனால் பரமசிவனும் மகா விஷ்ணுவும் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்கள் சிலவேயுள. அவற்றுள் பர்க்கேசுவரம், மாதலீபுரம், உத்தர ஹாலாஸ்யம் என்னும் பெயர் பெறும் க்ஷேத்திரம் ஒன்றாகும். அதில் பர்க்கர் என்ற முனிவர் இருபத்தெட்டாவது கிருதயுகத்தில் 1000-வருடமும் திரேதாயுகத்தில் 500-வருடமும் துவாபரயுகத்தில் 250-வருடமும் பூசித்துப்பேறு பெற்றார். அம்முனிவர் வரலாற்றையும் அவர் பூசித்துப் பேறுபெற்ற விருத்தாந்தத்தையும் உங்களுக்கு விபரமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினர்.

இப்பூவுலகுக்குத் திலகம் போன்றதும் சுவர்க்க, மத்திய, பாதாளமென்னும் மூவுலகங்களிலும் சிறந்து விளங்குவதாகிய மந்தாரவனம் என்னும் க்ஷேத்திரம் ஒன்று உளது. மகா புண்ணிய நதியாகிய காவேரியும் அவ்வனத்தின் வழியாகவே செல்கின்றது. அத்தலத்தில் வைவஸ்வத மனுவின் ஆளுகையில் இருபத்தெட்டாவது கிருதயுகத்தில் பர்க்கர் என்னும் மகரிஷி ஒருவர் அவதரித்தார். அவர் வேதவேதாந்தம் முதலிய சகலகலைகளையும் கற்று, பொறுமை, அடக்கம், சத்தியம், அஹிம்சை முதலிய

நற்குணங்களையுடையவராயிருந்ததால், கரையற்ற இந்த சம்சாரம் என்னும் சாகரத்தைத் தாண்டத் தகுந்த தோணியாகிய இந்த மனிதப் பிறவி வாய்த்ததென் றெண்ணி கிருகஸ்தாசிரமம் முதலிய மூன்று ஆசிரமங்களையுமே வெறுத்து, பிரமசரிய ஆசிரமத்திலேயே இருந்து தவஞ் செய்து தமது வாழ்நாளைக் கழித்துவிட வேண்டுமென்று நைட்டிக பிரமசாரியாயிருந்து அவ்வாசிரமத்துக்குரிய நியமங்களில் சற்றும் தவறாது ஒழுகி வந்தார்.

அவர் இப்பூமண்டலம் முழுதும் சுற்றிவர வேண்டுமென்ற ஆவல் கொண்டு ஒவ்வொரு ஸ்தலமாகச்சென்று தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து வருகையில் தெய்வானுக்கிரகத்தால் சஹ்யபர்வதத்தை அடைந்து அங்குள்ள சங்கம் என்னும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தாத்தாத்திரேயர் என்னும் மாலின் அம்சமான மகரிஷியின் சன்னிதியில் திருபதை என்னும் விசேஷணத்துடன் கூடியிருக்கும் காயத்ரீ தேவதையை மந்திரபூர்வமாக ஜெபித்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு அங்கிருந்து காவிரியின் இருகரைகளிலும் உள்ள க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். அங்கு மருத்விருதை எனும் வேதங்களால் புகழப்பட்ட இப்புண்ணியநதியானது இரண்டு பிரிவாகப் பிரிந்து செல்கின்றதில் பர்க்கர் உத்தர காவிரியின் தென்கரையிலுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு சென்றார். அப்படிச் செல்கின்றவர் வழியில் பெரும்பாலும் மந்தார விருக்ஷங்கள் அடர்ந்த ஒருகாட்டைக் கண்டார். அதில் அசோகு, மா, கொன்றை, தேவதாரு, சந்தனம் முதலிய விருக்ஷங்களும் யானை, மான், காட்டுப்பசு முதலிய விலங்குகளும் மயில், குயில், கிளி முதலிய பக்ஷி

ஜாலங்களும் இருப்பதைக் கண்டு அவ்விடத்திலே சிலகாலம் தங்கித் தவஞ் செய்ய வேண்டுமென்ற எண்ணங்கொண்டு ஒரு பர்ணகசாலை அமைத்துக்கொண்டு அவ்விடத்தில் உள்ள உத்தர காவேரியில் ஸ்நான, ஜப, தபம் முதலிய தமது நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு பர்ணகசாலையை அடைந்து சச்சிதானந்த சொரூபியாகிய பரப்பிரமத்தைத் தியானித்து நிஷ்டை கூடி இருப்பதுமாக இருந்தார்.

அதைக்கேட்ட சௌனகாதிமுனிகள் சூதமுனிவரைப் பார்த்து, "பர்க்கர் அங்கு எவ்வளவு காலம் வசித்தார்? அப்போது நேர்ந்தது என்ன என்பதையும் கூற வேண்டும்" என்று விண்ணப்பிக்கச் சூதமுனிவர் மேலும் சொல்லத் தொடங்கினர்.

## இரண்டாவது அத்தியாயம்.
# அபயங்கரதேவர் வரலாறு.

ஒரு நாள் பர்க்கர் தமது பர்ணகசாலையிலிருந்து புறப்பட்டு உத்தர காவிரியில் ஸ்நானம் செய்து ஜபதபங்களை முடித்துக் கொண்டு திரும்பி வரும்பொழுது ஆற்றின் நடுவில் ஒரு திட்டில் உள்ள ஒரு வில்வமரத்தின் அடியில் வந்து சேர்ந்தார். அப்போது அம்முனிபுங்கவரான பர்க்கருக்கு ஸ்ரீமந் நாராயணமூர்த்திகளின் பாத கமலங்களைத் தியானிக்க வேண்டுமென்ற அவா ஏற்பட்டது. உடனே அவர் அவ்விடத்திலேயே உட்கார்ந்து சர்வலோக ரக்ஷகரான திருமாலின் திருவுருவத்தைத் தியானித்துப்

பஞ்சேந்திரியங்களையும் ஒருமுகப்படுத்தி மெய்ம் மறந்து அன்னபானுதிகளையும் ஒழித்து, தியானத்திலேயே இருந்து வந்தார். திருமால் அவருடைய திடசித்தத்தைச் சோதிக்கத் திருவுளங் கொண்டு காவிரியில் வெள்ளப்பெருக்கு எடுத்து வரும்படி செய்ய அப்படியே பிரளய காலத்தில் உண்டாகின்ற வெள்ளம்போல் பிரவாகம் வந்து பர்க்கர் நிஷ்டையிலிருந்து வந்த திட்டு முழுவதும் ஜலத்தில் மூழ்கி அவருடைய மார்பளவும் ஜலத்தில் மறைந்து விடவே, பர்க்கர் நிஷ்டை கலைந்து பார்த்து, தம்மையும் அவ்வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடுமோ என்ற அச்சங் கொண்டு பின் வருமாறு ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைத் துதிக்கலானர்.

ஹே! லோகநாதனே, க்ஷீராப்திசயனனே! கிருத யுகத்தில் பிருதிவியின் பொருட்டும் தர்மசம்ரக்ஷணத்தின் பொருட்டும் சுக்கிலபக்ஷ பஞ்சமி திதியில் மச்சாவதாரம் எடுத்து மகா குரூரர்களான மது, கைடவர் என்ற இரண்டு அசுரர்களையும் ஒழித்து வேதங்களை எடுத்து பிரமதேவனுக்குக் கொடுத்து அருள் செய்தீர். ஜேஷ்டாசுத்த சுக்கில பக்ஷ துவாதசியில் கூர்மரூபம் எடுத்து இப்பூமண்டலத்தை உமது முதுகின்மேல் தாங்கி ஜகத்தை ரக்ஷித்தீர். சைத்ர சுத்த கிருஷ்ணபக்ஷ நவமியில் வராக ரூபமெடுத்து இரண்யாட்சன் என்னும் அசுரனைக் கொன்று, அவன் பூமியைப் பாயாகச் சுருட்டி சமுத்திரத்தில் ஒளித்திருந்ததை வெளியில் கொண்டு வந்து நிலைநிறுத்தினீர். வைசாக சுக்ல பக்ஷ சதுர்த்தசியில் நரசிம்ம ரூபம் எடுத்து இரண்யனைக் கொன்று, பக்த சிகாமணியாகிய அவன் மகன் பிரகலாதனைக் காப்பாற்றினீர். இவ்வாறு பலரையும் காப்பாற்றின நீர் அடியேன் பொருட்டும் கிருபை கூர்ந்து

இந்த வெள்ளத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

இவ்வாறு பலவிதமாகத் தோத்திரஞ்செய்த பர்க்கரின் முன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி லக்ஷிமி நிவாசனுய் சங்கு சக்ரதாரியாய் வனமாலா, வைஜயந்தி பூரகதாரியாய்த் தோன்றி அஞ்சாதேயும் என்று அபயங் கொடுத்து, ஓர் மச்சம் வந்து உம்மைத் தன் முதுகில் சுமந்து அக்கரை சேர்க்கும் என்று சொல்லி மறைந்தருளினர். பர்க்கர் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் கிருபையினல் ஆனந்தங் கொண்டு அச்சம் நீங்கியிருந்தார்.

உடனே மகாவிஷ்ணு ஒரு மச்ச ரூபத்துடன் வெள்ளத்தில் தோன்றி, மகரிஷியே என் முதுகின்மேல் ஏறிக் கொள்ளும் நான் உம்மைப் பத்திரமாய்க் கரையில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன் என்று சொல்லிற்று. அவ்வார்த்தைகளைக் கேட்ட பர்க்கர் திருமாலின் திருவருளை வியந்து அம்மச்சத்தின் முதுகில் ஏறிக் கொண்டு கரையை அடைந்தார்.

கரை சேர்ந்த பர்க்கர் தனக்கு அபயங் கொடுத்துக் காத்தருளிய மகாவிஷ்ணுவை மறுபடியும் தோத்திரம் செய்தார். அடியார்க் கெளியனை திருமால் முன்போல் அவருக்குப் பிரத்தியக்ஷமாகி நீ வேண்டும் வரம் யாது என்ன, பர்க்கர் சுவாமி, தேவரீர் இந்தக் கோலத்துடனே இந்த க்ஷேத்திரத்தில் சதாகாலமும் வீற்றிருக்க வேண்டும்; நானும் இப்பூமண்டலத்திலுள்ள மற்றையோரும் உம்மைப் பூசித்து வணங்கிப் பேறு பெறும்படி அநுக்கிரகிக்க

வேண்டும் என்று வேண்டினர். திருமால் அவருடைய பக்திக்கும் பரோபகார சிந்தைக்கும் வியந்து அப்படியே செய்வோம் என்று சொல்லி அவ்விடத்திலேயே கோயில் கொண்டெழுந்தருளினர்.

பர்க்கர் தமக்கு அபயங் கொடுத்து காத்தருளியதால் அபயங்கரர் என்று அவரைத் தோத்தரித்துப் பூசை செய்து கொண்டு வந்து சிலகாலம் சென்ற பிறகு நித்திய பூசை செய்து வரவும், பிரமோற்சவம் செய்து வரவும் ஹரிதத்தர் என்ற ஓர் அந்தண சிரேஷ்டரை நியமித்துத் தாம் முன் போல் அவ்விடத்திலேயே இருந்து தவஞ் செய்து கொண்டிருந்தார் என்று சொல்லி முடித்ததும் சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, பர்க்கர் அவ்விடத்தில் இருந்து வரும்போது என்ன நேர்ந்தது என்பதையும் கூற வேண்டுமென்று கேட்க, சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

## 3-வது அத்தியாயம்.

# ஹேமன் சாப விமோசனமான வரலாறு.

ஒரு நாள் பர்க்கர் வைகறையில் துயிலெழுந்து ஸ்நானம் செய்வதற்காகக் காவிரிக்குச் சென்றார். செல்லும் வழியில் ஒரு சிறு சர்ப்பம் குறுக்கே சென்று கொண்டு இருந்தது. பர்க்கர் அதைக் கவனியாமல் அதன்மேல்

தன் பாதுகைகளால் மிதிக்க அதன் தலை நொறுங்கி இறந்தது. பார்க்கர் திடுக்கட்டு, தனக்கு ஏற்பட்ட சர்ப்ப ஹத்தி தோஷத்தை நினைந்து வருந்துகையில் அந்த சர்ப்ப மானது ஒரு திவ்விய மங்கள மனித உருவங் கொண்டு பார்க்கரின் முன் தோன்றியது. உடனே பார்க்கர் அந்த திவ்விய புருஷனைப் பார்த்து, "நீர் யார், உமக்கு இந்த சர்ப்பதேகம் உண்டானதற்குக் காரணம் என்ன" என்று கேட்க, அவர் பின் வருமாறு தமது வரலாற்றைக் கூறத் தொடங்கினர். மகரிஷியே நான் பூர்வஜன்மத்தில் ஸ்ரீகாளி புரத்தில் (சீர்காழி) அந்தணர் குலத்தில் பிறந்தேன். என் பெற்றோர் என்னை ஹேமன் என்று பெயரிட்டழைத்தனர். நான் அந்தண குலத்திற்குரிய வேதம் ஓதுதல் முதலிய காரியங்களைச் செய்யாமல் துஷ்ட சுபாவமுள்ளவனாய், தோலினால் சர்ப்பம் ஒன்றைச் செய்து அதை மறைத்து எடுத்துக் கொண்டு போய் ஸ்திரிகள், குழந்தைகள் முதலிய வர்கள் இருக்கிற இடத்தில் எறிந்து அவர்களைப் பய முறுத்தி வந்தேன்.

---

ஒரு நாள் அந்த சர்ப்பத்தை பிரதோஷ காலத்தில் சிவ தரிசனார்த்தமாகக் கோயிலில் பிராமணர், ஸ்திரிகள் முதலான ஜனங்கள் கூடியிருந்தவிடத்தில் அதிநுட்பமான ஒரு நூலில் கோர்த்து எறிந்தேன். அது படம் விரித்து ஆடுவதையும் இங்குமங்காக ஓடுவதையும் கண்ட ஜனங்கள் பயந்து ஓடுகின்றதையும் கீழே விழுகிறதையும் அலறு கிறதையும் கண்டு நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந் தேன். இதைக் கண்ட மற்றவர்கள் அதைப் பாம்பென்றே நினைத்துத் தடியினாலும் கற்களினாலும் அடித்து நாசப் படுத்திய பிறகு அது உண்மையான பாம்பல்ல, ஏதோ

ஒரு விஷமி இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று தேடி என்னைக் கண்டு பிடித்து அரசன் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். அவ்வரசன் மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தானாதலால், நான் செய்த குற்றத்திற்குத் தண்டனையாக என்னை ஒன்றும் செய்யாமல் ஊருக்கு வெளியே துரத்தி விடும்படி ஆக்ஞாபித்தான். அதன்படி நான் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு ஒரு காட்டின் வழியே செல்லுகையில் ஒரு புலி என்னைக் கொன்று தின்று விட்டது. பிறகு, நான் ஒரு சர்ப்பத்தினிடம் உதித்து சர்ப்ப சிசுவாக இங்கு வாசம் செய்து வந்தேன். இந்த க்ஷேத்திரத்தில் சிறிது காலம் வாசம் செய்தமையாலும் இங்கு நீர் அபயங்கரதேவரைப் பூசித்து ஆராதனை செய்து வருவதை நான் தரிசித்து வந்ததாலும் உமது திருவடியினால் மிதியுண்டமையாலும் இந்த சர்ப்ப தேகம் மாறி என்னுடைய சுய ரூபத்துடன் கைலாசம் செல்லுகிறேன், எனக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டும் என்று தன் முன்னிருந்த தேவ விமானத்தைக் காண்பித்தான். பர்க்கர் ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் விடை கொடுத்து அனுப்பினார்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, பர்க்கர் தமக்குண்டான சர்ப்பஹத்தி தோஷம் எவ்வாறு நீங்கப் பெற்றார் என்று கேட்க சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

## 4-வது அத்தியாயம்.

# பர்க்கர் சர்ப்பஹத்தி நீங்கப்பெற்ற வரலாறு.

---

மகரிஷியான பர்க்கர் தமக்கு ஏற்பட்ட சர்ப்பஹத்தி தோஷம் நீங்கும் பொருட்டு சிவலிங்கப் பிரதிட்டை செய்தால் அந்தத் தோஷம் நீங்கும் என்பது வேதாகமங்களில் கூறப்பட்டிருப்பதை யுணர்ந்து சிற்ப சாஸ்திரத்தில் கூறப்பட்டிருப்பது போலவே குற்றமற்ற ஒரு சிலையைத் தெரிந்தெடுத்து, சிவலிங்கம் செய்து, அதற்கென ஒரு கர்ப்பக்கிரகம் நிர்மாணித்து, ஒரு சுப முகூர்த்தத்திலே மந்திர பூர்வமாக சிவலிங்க ஸ்தாபனம் செய்து ஒரு மண்டலம் (45-நாள்) நமகம் சமகம் முதலிய வேதமந்திரங்களுடன் பக்தி சிரத்தையுடன் அபிஷேகம், நைவேத்தியம், தீபாராதனை முதலிய சோடச உபசாரங்களுடன் பூசித்து வந்தார். உடனே சிவபெருமான் கோடி சூரியப் பிரகாசத்துடன் சிவலிங்கத்திலிருந்து தரும சொரூபமான தமது விருஷப வாகனத்தின்மேல் கங்கை, சந்திரன், சர்ப்பம் முதலியவைகளுடன் கூடிய ஜடாமண்டலதாரியாய் உமாதேவியாருடன் காக்ஷி கொடுத்தருளினர். உடனே பர்க்கர் ஆனந்தபரவசராய், பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஆனந்தத்தால் மெய் சிலிர்த்து நிற்க, பர்க்க முனிவரே நீர் பிரதிட்டை செய்திருக்கின்ற இந்த சிவலிங்கத்தில் எழுந்தருளியிருந்து உமது பிரீதியின் பொருட்டும் சர்வ ஜனங்களினுடைய இஷ்ட சித்திகளைப் பூர்த்தி செய்யவும் விரும்புகின்றோம் என்று திருவாய் மலர்ந்தருளினர் சிவபெருமான்.

உடனே பர்க்கர் ஆனந்த பரவசராய் மெய்ப்புளகாங்கிதங் கொண்டு, அடியேன் தேவரீருக்குப் பிரமோற்சவம் செய்து நானும் சகல ஜனங்களும் தேவர்களும் கண்டு தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைய வேண்டுமென்ற ஆவல் கொண்டுள்ளேன். ஆகையால் அவ்வெண்ணத்தையும் பூர்த்தி செய்தருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார். உடனே சிவபெருமான் அவருடைய பக்தியையும் சகல ஜனங்களும் நல்வாழ்வடைய வேண்டுமென்ற நோக்கத்தையுடையவராயிருத்தலையும் வியந்து பாராட்டி, நீர் வைசாக மாதத்தில் சப்தமிதிதியும் புனர்வசுநக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிக்க ஆரம்பித்தபடியால் அதே தினத்தில் நமக்கு துவஜாரோகணம் செய்து வைசாக நக்ஷத்திரத்தன்று தீர்த்தோற்சவம் செய்யக் கடவீர் என்று கூறிச் சிவலிங்கத்தில் மறைந்தருளினர்.

உடனே பர்க்கர் ஆனந்த பரவசராகித் திருவருளை வியந்து சிவபெருமானுடைய திருக்கோயிலில் அர்த்த மண்டபம், மகா மண்டபம், பிரகாரம், கோபுரம் முதலியவைகளையும் உமாதேவியாருக்குத் தனியாக ஓர் ஆலயமும் நிருமாணித்து, சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியபடியே பிரமோற்சவம் செய்ய நினைத்து முதல் நாள் துவஜாரோகணம் செய்து இரண்டாம் நாள் கற்பக விருக்ஷ வாகனத்திலும், மூன்றும் நாள் சந்திர சூரியப் பிரபை வாகனத்திலும், நான்காம்நாள் பூதவாகனத்திலும், ஐந்தாம் நாள் விருஷப வாகனத்திலும், ஆறும் நாள் கஜ வாகனத்திலும், ஏழாம் நாள் கைலாச வாகனத்திலும், எட்டாம் நாள் அஸ்வ வாகனத்திலும் எழுந்தருளுவித்து

வீதியுலா வரச் செய்து, ஒன்பதாம் நாள் ரதோற்சவமும், பத்தாம் நாள் ஸஹ்ய பர்வத குமாரியான காவேரி நதியில் தீர்த்தோற்சவமும் செய்து சகல ஜனங்களும் தேவர் முதலானவர்களும் கண்டு களிக்கும்படி பிரமோற்சவம் செய்து ஆனந்த பரவசராகியிருந்தார். உடனே, பர்க்க முனிவரேநீர் இந்த கிருதயுகத்தில் 1000 ஆண்டும், திரேதா யுகத்தில் 500 ஆண்டும், துவாபர யுகத்தில் 250 ஆண்டும், கலியுகத்தில் 125 ஆண்டும் இந்த க்ஷேத்திரத்திலேயே யிருந்து கொண்டு நம்மைப் பூசித்தும் மத்ய காலங்களில் சுவர்க்கலோக வாசம் செய்து கொண்டும் இரும். பிறகு நம்முடைய சிவலோகம் சித்திக்கும் என்று ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. அதைக் கேட்ட பர்க்கர் அவ்வாறே இருந்து பிறகு ஹரர் என்ற நாமம் பூண்ட ஓர் அந்தண சிரேஷ்டரைச் சிவபூசைக்கு நியமித்து விட்டுத் தமது தேகத்தை யொழித்து விமானத்திலேறி தேவலோகம் சென்றூர்.

இதனுலேயே இந்த க்ஷேத்திரத்துக்கு, ஜம்புபர்க்கேசுவரம் என்னும் பெயர் கிருத யுகத்தில் உண்டாயிற்று என்று சொல்லிச் சூதமுனிவர் சிவானந்த வெள்ளத்தில் திளேத்திருந்தார். இதனேக் கேட்ட சௌனகாதிமுனிவர்கள் முனிசிரேஷ்டரே, திரேதா யுகத்தில் ஸ்ரீமந் நாராயணன் என்னென்ன அவதாரம் எடுத்தார் என்பதையும் மாதலீபுரம் எனப்பெயர் பெற்றதின் காரணமும் கூறவேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமுனிவர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்.

## 5-வது அத்தியாயம்.

# மாதலீசுவரமான வரலாறு.

---

திரேதா யுகத்தில் வைசாக சுக்கில பக்ஷ திரயோதசி திதியில் பெருங்காற்றும் மழையும் ஏற்பட்டு யுகாந்த கால வெள்ளம்போல் காவிரியில் பெருக்கு உண்டாகி பர்க்கபுரம் முழுவதும் மண் குவியல்களால் மூடப்பட்டுவிட்டது. அப்போது கிருத யுகத்தில் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் ஆகிய நான்கு அவதாரங்கள் எடுத்து துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த ஸ்ரீமந் நாராயணன் பாத்திரபத சுக்கில பக்ஷ துவாதசி திதியில் வாமனவதார மெடுத்து மாபலிச் சக்கரவர்த்தியை அடக்கி இந்திரனுக்கு தேவலோகாதிபத்தியத்தை நிலை நாட்டினார். வைசாகமாச சுக்கிலபக்ஷ சதுர்த்தசியில் பரசுராம அவதாரம் எடுத்து இருபத்தெட்டு ராஜ வம்சங்களைக் கருவறுத்தார். சைத்திர மாசம் சுக்கிலபக்ஷ நவமி திதியில் ராமாவதாரமெடுத்து தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனாகி ராஜ்யாபிஷேகம் செய்விக்கப்பெறும் காலத்தில் சிற்றன்னையின் சூழ்ச்சியால் 14-வருடம் வனவாசம் செய்து வருங்காலத்தில் சீதாதேவியை இராவணன் தூக்கிக் கொண்டுபோய் இலங்கையில் சிறை வைத்திருந்ததை அறிந்து அங்கு போய் இராவணனோடு பாதசாரியாய் யுத்தம் செய்து கொண்டிருக்கும்போது தேவர்கள் இந்திரனை நோக்கி இராவணாதி ராக்ஷசர்களால் துன்பப்படும் நம்மை விடுவிக்கும்பொருட்டு தசரத குமாரனாக அவதரித்து வந்துள்ள ஸ்ரீராமர் தரையிலும் இராவணன் தனது இரதத்தின்மேலும் இருந்து

கொண்டு யுத்தம் செய்கிறதை நாம் பார்த்துக் கொண்டு இருக்கலாமா, ஆகையால் மாதலியுடன் உன்னுடைய ரதத்தை அனுப்பி அதிலிருந்து ராகவன் யுத்தம் செய்து ராவணனைக் கொன்று வெற்றி மாலை சூடுவதை நாம் கண் குளிரப் பார்ப்போம் என்று வேண்டிக் கொண்டனர். இந்திரன் அவ்வண்ணமே மாதலிக்கு உத்திரவு செய்ய மாதலி ரதத்தை அலங்கரித்து வேண்டிய படைக்கலன் களுடன் அதிவேகமாகத் தெற்கு நோக்கிச் செல்லுகையில் பர்க்கபுரத்தை மூடியிருந்த மணலில் தேர்ச் சக்கரங்கள் புதையுண்டு அவ்விடத்தில் இருந்து நகரமாட்டாமல் ரதம் நின்று விட்டது.

உடனே சாரதியாகிய மாதலி ரதத்திலிருந்து இறங்கி அங்குத் திருக்கோயில் கொண்டருளும் அபயங்கரதேவர் சன்னிதியிற் சென்று சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்து உமது சேவகார்த்தமாய் இலங்கைக்குச் செல் கின்ற எனக்குத் தடங்கல் ஏற்பட்டதே என்று துக்கித்து நிற்க. ஓ மாதலியே பயப்படாதே; இந்த ரதம் தடைபட்டு நிற்கின்ற இடத்தில் பூமியின்கீழ் பர்க்கர் என்னும் ரிஷியால் பிரதிட்டை செய்து பூசிக்கப்பட்ட சிவலிங்கம் ஒன்று இருக்கின்றது. அதை எடுத்துப் பிரதிட்டை செய்வதால் உண்டாகின்ற புண்ணியத்தையும் கீர்த்தியையும் அளவிட்டுக் கூற முடியாது. உன்னால் பிரதிட்டை செய்யப்படுவதால் மாதலீசுவரர் என்னும் பெயரும், இந்த க்ஷேத்திரத்திற்கு மாதலீபுரம் என்னும் பெயரும் வழங்கும். சிவபெருமான் உனக்கு ஸ்திரமான கீர்த்தியைக் கொடுப்பதற்கே இவ்வாறு செய்திருக்கின்றார் என்று அசரீரியாகக் கூற அதைக் கேட்டு ஆனந்தங்கொண்டு தன் ரதம் தடைப்பட்

டிருந்தவிடத்திற்கு வந்து, சிவபெருமானை நினைத்து அஞ்சலி யஸ்தனுய்த் துதிக்க, நீ விரைவிற் சென்று தாசரதியின் சேவையைச் செய்து திரும்பி வரும்போது திருமால் அருளிய பிரகாரம் செய்வாயாக என்று அசரீரி வாக்கு ஒன்று கேட்டது.

உடனே மாதலி சிவபெருமான் திருவருளினுல் ரதத்தின் மேலேறிச் செலுத்திக் கொண்டு போய் ராகவனிடம் தேவேந்திரன் ரதம் அனுப்பியிருப்பதைக் கூற அவரும் சந்தோஷங் கொண்டு அந்த ரதத்தின் மேலேறி யுத்தம் செய்து ராவணனைக் கொன்று விபீஷணனுக்கு முடிசூட்டி சீதாதேவியைச் சிறை மீட்டுக் கொண்டு அயோத்தி சென்று இராச்சியபாரம் செய்து கொண்டிருக்கும்போது, மாதலி தன் விருப்பத்தைத் தெரிவித்தார். ஸ்ரீராமர் அதைக் கேட்டுச் சந்தோஷங் கொண்டு உத்தரவு கொடுத்தனுப்ப மாதலியானவர் தன்னுடைய ரதத்தின் மேல் ஆரோகணித்து, தன் தேர் தடைபட்டவிடத்திற்கு வந்து மண் குவியலை நீக்கித் தோண்டுங்கால் சிவலிங்கம் தோன்ற அதை எடுத்துப் பிரதிட்டை செய்து அவ்விடத்தில் ஓர் கோயிலும் நகரமும் உண்டாக்கிச் சிவபெருமான் ஆக்ஞைப்படியே தேவலோகம் சென்று நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் தேவேந்திரனுக்குக் கூறினர். தேவேந்திரன் மிக மகிழ்ச்சி கொண்டு மற்றைத் தேவர்களுடன் வந்து பூசித்து ஆனந்தபரவசமாகி ஸ்ரீமாதலீசுவரருக்குப் பிரமோற்சவம் முதலானதுகளை நடத்தியும், அப்போது அந்த நகரத்தில் பர்க்கமுனிவர் ஓர் அந்தணர் குலத்தில் அவதரித்து சுருசி என்ற நாமம் பூண்டு இளமைப் பருவத்திலேயே சகல வேதாகமங்களைக் கற்று நல்லொழுக்க

முடையவராய் வாழ்ந்திருந்தமை யறிந்து, அந்நகர வாசிகளின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீமாதலீசுவரருக்குப் பூஜை செய்து வரும்படி நியமித்துச் சிவபெருமான் உத்தரவுப்படியே தேவலோகம் சென்றான். சுருசி என்னும் அந்தணராகிய பர்க்கர் திரேதா யுகத்தில் 500 வருட காலம் பூசித்துக் கொண்டிருந்த பிறகு சிவலோகத்தையடைந்தார்.

இதைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்து எழுந்து சூதமுனிவரைப் பார்த்து முனிசிரேஷ்டரே, இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானுக்குப் பர்க்கேஸ்வரர், மாதலீசுவரர் என்று பெயர் ஏற்பட்டதன் காரணத்தைத் தெரிந்து கொண்டோம். இனி இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு சுந்தரேசுவரர் என்றும் உமையம்மைக்கு மீனாக்ஷி என்றும் பெயர் ஏற்பட்டதன் காரணத்தையும் கூற வேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

---

## 6-வது அத்தியாயம்.

## உத்தர ஹாலாஸ்யமான வரலாறு.

---

இந்திரிய நிக்கிரகம் செய்து, வாயு பட்சணம் செய்து கொண்டு பிரமசரிய விரதம் அனுட்டித்துக் கொண்டு இருந்த மகரிஷிகளுள் மிகப் பிரசித்தி பெற்ற உரோமசர் ஒருசமயம் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டு பம்பை என்னும் தடாக மார்க்கமாய் வருகையில் அத்தடாகத்தை

யும் அதன் மத்தியில் இருந்த தாமரச புஷ்பங்களையும் கண்டு அப்புஷ்பங்களால் சிவபெருமானை அருச்சிக்க வேண்டு மென்று விருப்பங் கொண்டார்.

உடனே அவர் சத்புருஷர்களின் மனம்போல் தெளிந் திருந்த நீரையுடைய அத்தடாகத்தில் இறங்கினர். அப்போது அவ்விடத்தில் சுவர்ண மாலையை அணிந்த கந்தர்வனொருவன் திகம்பரனாய் மஞ்சுகோஷை என்னும் தன் பத்தினியுடன் ஜலக்கிரீடை செய்து கொண்டும் சிற்றின்ப விஷயங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருப் பதையுங் கண்டு கரையேறி அப்புறம் சென்றார்.

அவரைப் பார்த்த கந்தர்வனும் கந்தர்வ ஸ்திரீயும் அவருடைய உருவத்தைக் கண்டு நகைத்து, வானரம் போன்றும் முதலையைப் போன்றும் இருக்கின்றார் என்று ஏளனம் பண்ணி நிந்தித்தார்கள். உடனே முனிவர், நீங்கள் என்னை மர்க்கடம் என்றும் வானரம் என்றும் நிந்தித்தபடியால் நீங்களே அந்த வானர ஜன்மமும் முதலை ஜன்மமும் அடைவீர்கள் என்று சாபம் கொடுத்தேகினர். உடனே அவர்கள், இவர் ஒரு முனிவர்போல் இருக்கிறது; இவருடைய சாபம் பொய்க்காது; ஆகையால் இவரிட மிருந்தே சாப விமோசனத்துக்கு வழியையும் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று அவாக் கொண்டு முனிவரைப் பின் தொடர்ந்து சென்று அவரது பாதங்களில் சாஷ்டாங்க மாக விழுந்து நமஸ்கரித்து அடியேங்கள் செய்த அபசாரத்தைப் பொறுத்து எங்களை மன்னிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

உரோமசர் அவர்கள்மேல் இரக்கம் கொண்டு, நீங்கள் என்னைப் பார்த்து, குரங்கென்றும் முதலை என்றும் கூறிய படியால் நீங்கள் இருவரும் அதே ஜன்மம் எடுக்கக் கடவீர்கள். ஆயினும் நீங்கள் செய்தது தவறு என்பதை உணர்ந்து மன்னிக்கும்படி கேட்பதால், உங்களுக்கு விமோசனம் ஆகும் வழியைக் கூறுகிறேன் கேளுங்கள் என்று சொல்லி, இப்பூவுலகத்தில் உத்தர காவேரியின் தென்கரையில் மாதலீபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் முதலில் குரங்கு ஜன்மம் எடுத்து, அதன்பின் அங்குள்ள உத்தர காவிரியில் முதலை ஜன்மம் எடுத்துப் பிறகு மாதலீசுவரர் அருளால் உங்கள் தேவலோகம் செல்வீர் களாக என்று சொல்லி விட்டுத் தம் வழியே சென்றார். முனிவர் சாபத்தின்படியே சித்திரசேனன் என்ற கந்தர்வ னும் மஞ்சுகோஷை என்ற அவன் பத்தினியும் அந்த க்ஷேத்திரத்தில் குரங்குகளாக அவதரித்து, மாதலீசுவரர் ஆலயத்தின் கோபுரத்தில் வசித்து வந்தன. கோயிலில் நடைபெறுகிற பூசை காலங்களில் தரிசனம் செய்வதும் கோபுரத்தின் மேலிருந்து நர்த்தனம் செய்வதும் ஆலயத்தில் கிடைக்கிற பலியன்னத்தைப் புசிப்பதும் சுவாமி தரிசனார்த்தமாக வருகிறவர்கள் கொடுக்கிற ஆகாரத்தை உட்கொள்வதும் புண்ணிய தீர்த்தத்தைப் பருகுவதும் அதில் நீராடுவதுமாகத் தங்கள் காலத்தைக் கழித்து வந்தன.

இவ்வாறு ஆலயத்தில் வசித்து வந்த அக்குரங்குகள் ஒருநாள் கோயில் மடைப்பள்ளியில் புகுந்து அங்கு இருந்த அன்னத்தைப் புசித்துக் கொண்டிருக்கும்போது அங்கிருந்த சமையற்காரன் கொள்ளிக்கட்டையை எடுத்து

அவைகளால் அக்குரங்குகளை அடித்தான். அப்படி அடிபட்ட குரங்குகள் தங்கள் மேலுள்ள உரோமங்கள் பொசுங்கி உஷ்ணம் தாங்காமல் அங்குள்ள ஒரு கிணற்றில் விழுந்து இறந்தன. பிறகு அக்குரங்குகள் இரண்டும் முதலைகளாகப் பிறந்து காவிரியாற்றின் மடுவில் வசித்து வந்தன. இப்படியே அந்த கந்தர்வர்கள் இருவரும் முதலை ரூபத்துடன் வசித்து வருகையில் ஒரு நாள் அவ்விடத்தில் நீராடச் சென்ற மாதலீசுவரருடைய காலையும் உமையம்மையுடைய காலையும் கெட்டியாய்க் கௌவிக் கொண்டன. இதனையறிந்து சிவபெருமானும் உமையவளும் தங்கள் மற்றொரு காலால் உதைத்தார்கள். உடனே அம்முதலைகள் உயிர் நீங்கப்பெற்று தங்களுடைய கந்தர்வ ரூபத்துடன் கரைமேல் தோன்றி, தங்களுக்கு உரோமச முனிவரால் ஏற்பட்ட சாபத்தையும் அவர் சொல்லிய படியே நடந்து சாப விமோசனத்தைப் பெற்றதையும் கூறித் துதித்துப் போற்றி நின்று எங்களை ஆட்கொண்டருள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

உடனே சிவபெருமான் நீங்கள் வேண்டிய வரத்தைப் பெற்றுக் கொண்டு உங்கள் லோகம் செல்லலாம் என்று உத்தரவு செய்தார். உடனே அவர்கள் சிவபெருமானைப் பணிந்து எழுந்து தேவரீர் இந்த சுந்தர ரூபத்துடனே மீனாட்சி சமேதராக இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும். இந்த க்ஷேத்திரம் உத்தர ஹாலாஸ்யம் என்றும் இத்தீர்த்தம் வைகை என்னும் பெயருடனும் ஆலயத்தில் உள்ள தீர்த்தம் பொற்றாமரைத் தீர்த்தமாகவும் விளங்க வேண்டும். எங்கள் சாப விமோசனமான இந்த

இடத்தில் நீராடுகிறவர்களுக்கு முதலைகளினால் யாதொரு தீங்கும் ஏற்படாவண்ணம் அருள்புரிய வேண்டும் என்றும் பிரதி வருஷமும் இத்தினத்தில் தாங்களும் உமாதேவியாருடன் நீராடி அன்றைய தினத்தில் இத்தீர்த்ததில் ஸ்நானம் செய்கிறவருக்கெல்லாம் ரிஷபவாகனரூடராய் உமாதேவியுடனும் சகல தேவகணங்களுடனும் காக்ஷி கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் அவர்களுடைய வேண்டுகோளின்படியே நடக்கும் என்று ஆக்ஞாபித்துத் திருக்கோயிலுட் சென்றார். சித்திரசேனனும் மஞ்சுகோஷையும் பிறகு ஆலயத்துட் சென்று சிவபெருமானையும் உமாதேவியாரையும் பூசித்து வணங்கி விடைபெற்றுத் தங்கள் உலகம் சென்றார்கள். அதுமுதல் இந்த க்ஷேத்திரம் உத்தர ஹாலாஸ்யம் என்ற பெயருடன் விளங்குவதாயிற்று.

இவ்வாறு கூறியதைக்கேட்ட சௌனகாதிமுனிவர்கள் மறுபடியும் சூதரை வணங்கி, முனிசிரேஷ்டரே! அந்த பர்க்கமுனிவர் த்வாபர யுகத்தில் என்ன பெயருடன் அவதரித்தார் என்பதையும் ஹரி ஹரன் இவர்களை எவ்வாறு பூசித்தார் என்பதையும், திருமால் அந்த யுகத்தில் எடுத்த அவதாரங்களையும் கூற வேண்டுமென்று விண்ணப்பிக்கச் சூதமுனிவர் கூறத் தொடங்கினார்.

## 7-வது அத்தியாயம்.

## சுமசேகரன் சூலைநோய் நீங்கப்பெற்ற வரலாறு.

---

காவிரியின் நீர்வளத்தால் நிலவளம் மிகுந்த சோழவள நாட்டில் சோழவம்சத்தில் சுமசேகரன் என்னும் ஓர் அரசன் அவதரித்தான். அவன் மனுநீதி தவறாமல் தன்

குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவர்களாலும், கள்வராலும், காட்டு விலங்குகளாலும் யாதொரு விதமான தீங்கும் வாராமலும், காட்சிக்கு எளியனாயும், கடுஞ்சொல் இலனாயும் அரசாட்சி செய்து வந்தான். அவனது ஆட்சியில் புலியும் பசுவும் ஓர் துறையில் தண்ணீர் குடிக்கும். மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும் ஒரு கூட்டில் வாழும். அவன் குடிகளிடத்தில் வாங்கி வந்தது ஆறில் ஒரு கடமை தான். இப்படி நீதி தவறாமல் அரசாக்ஷி செய்து வந்தான். ஆயினும் முன் தீவினைப் பயனால் சூலை என்னும் கொடூரமான வியாதி அவனைப் பீடித்தது. அதனால் அவன் அடைந்த கஷ்டத்தை யாராலும் உரைக்க முடியாது. நாளடைவில் அவனுடைய உடல் நலம் குறைந்து கொண்டே வந்து கடைசியில் ஆகாரம் சாப்பிட முடியாமற் போய்விட்டது. அந்த வியாதி நீங்கிக் குணமடைய வேண்டி, தன் தேசத்திலிருந்தும் பிற தேசத்திலிருந்தும் ஆயுர்வேத வைத்தியர்களிடம் மருந்து சாப்பிட்டும் குணமடையாமல் வருத்தமுற்று மிகுந்த மனக்கிலேசமுள்ளவனாயிருந்தான்.

இவ்வாறிருக்கையில் அவனுடைய நல்வினைப் பயனால் நாரதமுனிவர் அங்கு வந்தார். அவரைக் கண்டதும் அரசன் எழுந்து பயபக்தியுடன் வணங்கி ஆசனத்தில் இருத்தி உபசரித்தான். திரிகாலங்களையும் உணர்ந்தவராகிய நாரதமுனிவர் அரசனுடைய முகவாட்டாத்தின் காரணத்தை அறிந்து அவனுக்கு அருள் செய்ய வேண்டுமென்று நினைத்தார். உடனே அவர் அரசனை நோக்கி, ஓ ராஜனே! நீர் இவ்வித கொடிய சூலை நோயினால் வருந்துதலை அறிந்து உம்முடைய கஷ்டத்தைப் போக்கு

வதற்காகவே நான் இங்கு வந்தேன். இந்த நோய் உன்னை விட்டு சீக்கிரத்தில் நீங்கிவிடும்; கவலைப்படாதேயும் என்று கூறி, முதலில் உமக்கு இந்த நோய் உண்டான காரணத்தையும் அதன்பின் அது நீங்குவதற்கு உபாயமும் கூறுகிறேன் கவனமாய்க் கேளும் என்று கூறிப் பின் வருமாறு சொல்லத் தொடங்கினர்.

நீர் முன் ஜன்மத்தில் அந்தணர் குலத்தில் அவதரித்து சுரூசி என்னும் பெயருடன் மாதலீபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்தீர். அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய மாதலீசுவரரையும், மகாவிஷ்ணுவாகிய அபயங்கர தேவரையும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பூசித்து வந்தீர். அப்போது அந்த க்ஷேத்திர வாசிகளும் யாத்திரீகர்களான தனவான்களும் உம்முடைய செய்கைக்காக வியந்து நீர் பொன்னசை யற்றவரென மதித்தும், அந்த க்ஷேத்திரத்தில் செய்யும் தருமமானது ஒன்று நூறுகப் பலன் தரும் என்பதை அறிந்தும், தானங்களிற் சிறந்த அன்னதானம் செய்யும் பொருட்டு உம்மை நம்பி அளவிறந்த தனங்களையும் தானியங்களையும் கொடுத்து யாத்திரீகர்களுக்கும், சுவாமி தரிசனர்த்தமாக வரும் அந்தணர் முதலியவர்களுக்கும் சமாராதனை செய்து வரும்படி சொல்லியிருந்தார்கள். நீர் அவ்வாறு செய்யாமல் திரவியத்தைத் துர்விநியோகம் செய்தும், உம்முடைய சொந்தக்காரருக்கு மட்டும் நல்ல கறிவகைகளுடன் போஜனம் செய்வித்தும் யாத்திரீகர்களுக்கும் மற்றவர்களுக்கும் சரியானபடி சாப்பாடு செய்விக்காமல் பராமுகமாயிருந்ததுடன் அவர்களைத் தூஷித்தும் வந்தீர். அந்தக் கொடிய தீவினையின் பயனுகத்தான் நீர் இந்தச் சூலை நோயினல் வருந்துகிறீர்.

இந்தத் துவாபரயுகத்தில் நீர் ஜீவித்திருக்கவேண்டியது 250 வருடம்; இதில் 50 வருடம் சென்றுவிட்டது; பாக்கி 200 வருடங்களும் நீர் தேகாரோக்கியத்துடன் வாழ விரும்பினால் சகல ஜீவராசிகளுக்கும் ஹிதத்தையே செய்கின்றவராகிய சங்கரனுக்கு நவ ரத்தினங்கள் இழைத்த சூலாயுதம் ஒன்று செய்து அர்ப்பணம் செய்யவேண்டும்; பிறகு கந்தர்வ பஞ்சமி திதியில் காவிரியில் ஸ்நானம் செய்து அபயங்கரர் ஆலயத்தை அங்கப் பிரதக்ஷணம் செய்து அபிஷேக ஆராதனை செய்து பிராமண போஜனம் செய்விக்க வேண்டும். பிறகு நீர் போஜனம் முடித்துக் கொண்டு மாதலீசுவரர் ஆலயத்திற் சென்று அபிஷேகாராதனை முதலியவற்றைச் செய்து சமாராதனை செய்வித்து பிறகு நீர் உண்ண வேண்டும்; இம்மாதிரி ஒரு மண்டலம் (45 நாள்) செய்து வருவீராகில் உமது நோய் நீங்கி வஜ்ஜிர தேகத்தைப் பெற்று அரோக திடகாத்திரராய் இருந்து ராச்சியபாரம் நடத்தி, பிறகு இந்த ஸ்தூல தேகத்தை ஒழித்து பாக்கியுள்ள இந்த துவாபர யுகம் முழுவதும் சுவர்க்கலோக வாசம் செய்து பிறகு கலியுகத்திலும் ஓர் அந்தணனுகப் பிறக்கப் போகிறீர்; இந்த துவாபரயுகத்தில் திருமால் என்னென்ன அவதாரம் எடுக்கப் போகிறார் என்பதையும் சொல்லுகிறேன் கேளும் என்று சொல்லிப் பின்வருமாறு கூறினர். முன் யுகங்களில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியினுல் கொல்லப்பட்ட அரக்கர்கள் மறுபடியும் மனிதர்களாகப் பிறந்து அரசர்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழ்ந்து கொடுங்கோல் நடத்தவும், தர்ம பரிபாலனத்தைக் கெடுக்கவும் போகிறார்கள். அவர்களை அழிப்பதற்குத் திருமால் ரோகிணி என்பவளிடத்தில் பாத்திரபத சுக்கிலபக்ஷ திரயோதசியில் பலபத்திரர்

(பரசுராமர்) ஆகவும், சிரவணமாதத்தில் கிருஷ்ணபக்ஷ ரோகணி கூடிய அஷ்டமி திதியில் அர்த்த ராத்திரியில் வசுதேவர் மனைவியாகிய தேவகியின் வயிற்றில் கிருஷ்ணன் ஆகவும் அவதரித்து, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யப் போகிறார் என்று சொல்லி மாதலீபுர க்ஷேத்திர மகிமையை வீணாகானம் செய்துகொண்டே தேவலோகம் சென்றார்.

இவ்விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்த சௌனகாதிமுனிவர்கள் சூதமுனிவரை நோக்கி முனிசிரேஷ்டரே! மேலும் அந்த க்ஷேத்திரத்தின் மகிமையைக் கூற வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். சூதமுனிவர் அவர்களுக்கு மகாராட்டிர தேசத்தரசனாகிய சந்திரப் பிரபுவுக்கு, அவன் குமாரத்தியாகிய வராங்கிக்குக் குஷ்டரோகம் ஏற்பட்ட விபரத்தையும் அதிலிருந்து நிவர்த்தியடையும் பொருட்டுக் காலவ முனிவர் கூறிய வரலாற்றையும் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

---

## 8-வது அத்தியாயம்.

## வராங்கி குஷ்டரோகியான வரலாறு.

---

இந்தப் பரதகண்டத்தில் காம்பீல்யமென்னும் நாட்டில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் அந்தணர்க்குரிய வேதம் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு தொழிலையும் செய்து கொண்டு மிகவும் சௌந்தரியமுடைய தன் பத்தினியுடன் இல்லறம்

109665



நடத்தி வந்தான். அவன் மனைவி மிகுந்த ரூபலாவண்ய முடையவளாயிருந்தும் அவன் கருத்தின்படி இன்பம் அனுபவிக்க இடந்தராமல் இருந்தாள். அவள் அப்படியே சிலகாலம் செய்து வந்ததால், அந்தப் பிராமணன் அவளை அலக்ஷியம் செய்து வேறு ஒரு ஸ்திரீயுடன் தன் இச்சைப் படி வாழ்ந்து வந்தான். இதனை அறிந்த அவன் மனைவி மிகவும் வருத்தமுற்றவளாய்த் தன் புருஷன் தன்னிடம் பராமுகமாய் இருப்பதை அவ்வூரில் இருந்த தன்னை ஒத்த ஸ்திரீகளிடத்தில் முறையிட்டு, இதற்கு என்ன செய்யலாம் என்று ஒவ்வொருவராய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இவளது துயரத்தைக் கேட்டு ஒரு ஸ்திரீ அவள்மேல் இரக்கங் கொண்டு, ஏ பெண்ணே! நீ இதற்காக மன வருத்தப்பட வேண்டாம். இவ்வூருக்குச் சமீபத்தில் காளிகாதேவியின் ஆலயம் ஒன்று இருக்கிறது. அந்த ஆலயத்தில் காஷாய உடை அணிந்து பிக்ஷுவின் வேடம் பூண்ட ஓர் ஸ்திரீ இருக்கிறாள். நீ அவளிடம் சென்று உன் கருத்தைத் தெரிவித்தால் அவள் உன் எண்ணத்தைப் பூர்த்தி செய்வாள். இந்த மாதிரியான ஸ்திரீகள் அவளிடம் சென்று முறையிட்டுக் கொண்டு அவள் சொல்லியபடி செய்து தங்கள் இஷ்ட சித்தியைப் பெற்றிருக்கிறார்கள் என்று அவளுக்கு இதோபதேசம் செய்தாள். இதைக் கேட்ட அந்தப் பிராமண ஸ்திரி மிகவும் சந்தோஷமடைந்து தன் காரியம் கை கூடுமென்று நினைத்து, ஒருநாள் காளிகா தேவியின் கோயிலுக்குச் சென்று, அங்கு தன் சிநேகிதி யானவள் சொல்லிய அடையாளத்துடன் காஷாய உடை யுடன் கபாலமாலையையும் அணிந்து ஜடாமண்டல பூஷிதையாய் கையில் ஜபமாலை வைத்துக் கொண்டு

ஷ்2:38.2119

எல்லோரையும் தன் வசப்படுத்தும் பைரவ மந்திரத்தைச் செபித்துக் கொண்டிருக்கின்ற பிக்ஷு ஸ்திரீயைக் கண்டாள். அந்த யோகினியைச் சுற்றி அவளுடைய சிஷ்யர்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் அந்த யோகினியின்மேல் அவளுக்கு அதிக நம்பிக்கை உண்டாயிற்று. உடனே மிகுந்த பயபக்தியுடன் தான் கொண்டு போயிருந்த நவ ரத்தினங்கள் இழைத்த மோதிரத்தைப் பாதகாணிக்கையாக வைத்து நமஸ்கரித்து எழுந்து அந்த யோகினியின் கிருபையை எதிர்நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

இவ்வாறு தன் முன் பயபக்தியுடன் நின்று கொண்டிருந்த ஸ்திரீயை, பிக்ஷு ஸ்திரீ உற்று நோக்கி, தன் மந்திர சக்தியினால் அவளுடைய விருத்தாந்தங்களை யுணர்ந்து அவளை நோக்கி, ஓ பெண்மணியே! உன் மனதில் உண்டாயிருக்கிற கஷ்டத்தை நான் நன்கு அறிவேன். அக்கஷ்டம் தீர்ந்து நீ சுகமாயிருக்க வேண்டுமென்று விரும்பினால் நான் சொல்லுகிறபடி செய்ய வேண்டும். உனக்குச் சம்மதமானால் சொல்லுகிறேன் என்று சொல்ல, அந்தப் பிராமண ஸ்திரீ அப்படியே செய்கிறேன் என்று மறுமொழி கூறினாள்.

உடனே அந்த யோகினி ஒரு பொட்டலம் சூரணத்தையும் ஒரு ரக்ஷையையும் கொடுத்து, சூரணத்தைப் பாலில் கலந்து உன் புருஷனுக்குக் கொடு, இந்த ரக்ஷையை நீ கழுத்தில் தரித்துக் கொள், ஒரு மண்டலத்திற்குள் உன் புருஷன் உனக்கு வசமாகி உன் இஷ்டத்திற்கு விரோதமாக நடக்கமாட்டான். வேறு ஸ்திரீயை மனத்தில் எண்ணவும் மாட்டான் என்று சொன்னாள். சூரணத்தையும் ரக்ஷையை

யும் பெற்றுக் கொண்டு போய் அந்த பிராமண ஸ்திரீ அம்மருந்தைப் பாலில் கலந்து தன் புருஷனுக்குக் கொடுத்தாள். யாதொரு கபடமும் அறியாத அவள் புருஷன் அதை வாங்கி அருந்தினன். அம்மருந்தின் வேகம் அவன் உடம்பில் உறைத்து நாளாவட்டத்தில் அவனுக்கு க்ஷய ரோகம் உண்டானதோடு அவனுடைய தேகத்தில் ரணங்கள் உண்டாகி அவற்றினின்றும் கிருமிகள் தோன்றி பார்க்கிறவர்கள் அருவருப்படையும்படி மேனி குறைந்து கொண்டே வந்தான். ஒரு நாள் அந்த பிராமணன் மிகவும் கிலேசத்துடன் தன் மனைவியைப் பார்த்து, எனக்கு உண்டாயிருக்கிற இவ்வியாதியைப் பார்த்துக் கொண்டு நீ உபேக்ஷையாயிருக்கிருயே; உன் இஷ்டப்படியே நடந்து வரும் நான் இவ்விதம் வியாதியால் கஷ்டப்படுகிறது நியாயமா. இந்த சமயத்திலாவது என் வியாதிக்குத் தக்க மருந்துகொடுத்துக் காப்பாற்ருவிடில் நான் மரணமடைவது திண்ணம், என்னைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய பொறுப்பு என்று பலவாறு வேண்டிக்கொண்டான்.

தன் கணவனுக்கு உண்டாயிருக்கிற வியாதியைக் கண்ட அந்த ஸ்திரீ ஐயோ நான் ஒன்று நினைக்க அது வேறு விதமாக முடிந்ததே இப்போது இவன் வியாதியால் இறந்து விட்டால் எனக்கு அமங்கலித்துவம் வந்து சேருமே இதற்கு என்ன செய்வது என்று நினைத்து, முன்பு மருந்து கொடுத்த அந்த யோகினியாகிய பிக்ஷு ஸ்திரீயிடமே சென்று அவள் கொடுத்த மருந்தை உட்கொண்ட பிறகு தன் புருஷனுக்கு ஏற்பட்டிருக்கிற வியாதியையும் அதனல் அவன் அடைகிற வேதனையையும் கூறினள். உடனே அந்த யோகினி பிராமண ஸ்திரீக்குத் தேறுதல் கூறி

வேறொரு மருந்தைக் கொடுத்து, இந்த மருந்தைக் கோடு; உன் புருஷன் வியாதி நீங்கிச் சுகம் அடைவான்; பயப் படாதே என்று சொல்லி ஒருமருந்தைக் கொடுத்தாள். அந்த ஸ்திரீ அந்த மருந்தைக் கொண்டு வந்து தன் புருஷனுக்குக் கொடுத்தாள். அதைச் சாப்பிட்டதும் பிராமணன் வியாதி நீங்கி வச்சிர தேகத்தைப் பெற்று முன்போல் மிகவும் சௌந்தரியத்துடன் விளங்கினான். பிறகு புருஷனும் மனைவியும் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார்கள்.

கொஞ்சகாலம் சென்ற பிறகு அந்த ஸ்திரீ சுமங்கிலி யாகவே இறந்து போனாள். யமதூதர்கள் புருஷனை வசப்படுத்த வேண்டுமென்று மருந்து கொடுத்து அவன் உயிரை மாய்க்கக் கூடிய வியாதியை உண்டாக்கி வைத்ததால் கொஞ்சகாலம் ரௌரவம் முதலான நரகத்தில் தள்ளி வைத்திருந்தார்கள். பிறகு நல்வினைவசத்தால் தான் செய்த பாபத்தை யுணர்ந்து தன் புருஷன் வேண்டிக் கொண்டபடி அவனுக்கு மருந்து கொடுத்துக் காப்பாற்றிய படியால் வராங்கி என்னும் பெயருடன் உனக்குக் குமாரி யாகப் பிறந்தாள். அவள் புருஷனாகிய அந்தணன் பிறகு சிலகாலஞ் சென்று தேகவியோகமடைந்து காம்பீல்யம் என்னும் நாட்டின் அரசனுக்குக் குமாரனாகப் பிறந்தான். அவனே இந்த பாகுகனாகிய உன் மருமகன் என்று காலவ முனிவர் சந்திரப்பிரபு என்னும் அரசனுக்குக் கூறினார். இவ்விதம் சூதமுனிவர் சொல்லி முடித்ததும் சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, அந்த அரசன் யார்? வராங்கிக்குப் பிறகு ஏற்பட்டது என்ன; என்பதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமென்று விண்ணப்பிக்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

## 9-வது அத்தியாயம்.

# வராங்கி குஷ்டரோகம் நீங்கப்பெற்ற வரலாறு.

மகாராஷ்டிர தேசத்தில் சந்திரப்பிரபு என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவ்வரசன் வேதாந்தங்களை யுணர்ந்தவனாயும் புருஷோத்தமனாயும் தன் குடிகளை மிகவும் பக்ஷமுடனேயே பராமரித்து நீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தான். தங்கள் அரசன் தங்களிடத்தில் மிகுந்த கிருபையுடன் ராச்சியபாரம் நடத்தியதனால் குடிகள் அவனைத் தெய்வமாகவே கொண்டாடினார்கள். இவ்வளவு சிறப்புடைய அரசனாயிருந்தும் புத்திரப் பேறில்லாதவனாயிருந்தான். ஆதலால் தனக்குப் பிறகு தன் அரசை ஏற்று நடத்தத் தகுதியுள்ள புத்திரனையடைய வேண்டி தன் பத்தினியாகிய சந்திரலேகையுடன் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி பலவித தானதருமங்களைச் செய்து வந்தான். சிலகாலஞ் சென்ற பிறகு அவ்வரசனின் மனைவி கருப்பவதியாகி ஒரு சுபமுகூர்த்தத்தில் ஒரு பெண் மகவைப் பெற்றாள். வெகுகாலம் சந்ததியில்லாமலிருந்து புண்ணிய வசத்தால் பெற்ற அக்குழந்தைக்கு வராங்கி என்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். அரச குமாரியான வராங்கி வளர்ந்து பேதை, பெதும்பைப் பருவம் நீங்கி மங்கைப் பருவம் அடைந்து மிகவும் அழகுள்ளவளாக விளங்கினாள். அரசன் தன்னுடைய பெண்ணின் அழகுக் கேற்ப, தகுந்த மணமகனைத் தேடி எங்கும் கிடைக்காமை யால் சுயம்வரம் ஏற்படுத்தி அதில் தன் மகள் இஷ்டப்பட்ட அரசகுமாரனை வரித்துக் கொள்ள ஏற்பாடு செய்து சகல

தேசத்து அரசர்களுக்கும் ஓலை அனுப்பினன். சுயம்வா தினத்தில் அங்கு வந்திருந்த அரசர்களில் முன் ஜன்மவினைத் தொடர்பினல் கலிங்கநாட்டரச குமாரனுகிய பாகுகனுக்கு மாலையிட்டாள்.

பிறகு சந்திரப்பிரபு ஒரு சுபமுகூர்த்தத்தில் தன் புத்திரி வராங்கியை அவள் இஷ்டப்படியே கலியாணம் செய்து வைத்து, தனக்குப் புத்திரனில்லாதபடியால் பாகுகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டித் தனியே ஒரு அரண்மனை நிர்மாணித்து அதில் தன் புத்திரி வராங்கியும் இளவரசனுகிய பாகுகனும் வசித்திருக்கும்படி எற்பாடு செய்து வைத்தான்.

இளவரசனுகிய பாகுகன் சந்திரப்பிரபுவினிடம் விடை பெற்றுத் திக்விஜயம் செய்து சகல தேசத்தரசர்களையும் வென்று அவர்கள் சந்திரப்பிரபுவுக்குக் கப்பம் கட்டி வரும்படி எற்பாடு செய்தான். தன் மருமகனுடைய சாமார்த்தியத்தையும் வீரத்தையும் கண்ட சந்திரப்பிரபு ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தான்.

பாகுகனும் வராங்கியும் தங்கள் அரண்மனையில் தனியே இருந்து வருங்கால் ஒருநாள் வராங்கியின் நாபியின் கீழ்ப்பாகத்தில் ஒரு திவலைப் பிரமாணம் இருந்த குஷ்டத்தை கண்டு மனம் கலங்கி, இவ்விஷயத்தை அறியாமல் மோசம் போனேமே என்று துக்கித்து, இனி இவளை விட்டு நீங்கி வாழ்வதே நல்லது என்று தீர்மானித்து அவ்விடம் விட்டுத் தன் அரண்மனை நோக்கிச் சென்முன். வராங்கி அவனைப் பின் தொடர்ந்து சென்று தன் வீட்டை விட்டுத் தான் மாத்திரம் அரண்மனைக்குச் செல்லுகிற

விபரத்தைக் கேட்க, பாகுகன் வாாங்கியைப் பார்த்து ஏ பெண்ணே! நீ என்னை இனிமேல் விரும்புவதால் யாதொரு பிரயோசனமுமேற்படாது. உன்னுடைய அழகைக் கண்டு நான் மோசம் போனதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன் என்று கூறி, தன் மனத்தில் உண்டான துயரத்திற்குக் காரணத்தையும் கூறி விட்டு வெகு வேகமாகத் தன் அரண்மனைக்குள் சென்று விட்டான்.

பின்பு வராங்கி மனக்கிலேசத்துடன் தன் தகப்பன் அரண்மனைக்குச் சென்று தன் தாயிடம் நடந்த விருத்தாந்தங்களைக் கூற, அவள் தாயான சந்திரலேகை அவளுக்குத் தேறுதல் கூறிக் கொண்டிருக்கையில் சந்திரப் பிரபு தற்செயலாய் அங்கு வந்து தன் மகள் வராங்கியின் முகவாட்டத்திற்குக் காரணம் என்னவென்று வினவ, சந்திரலேகை நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் தன் புருஷனுக்குக் கூறினுள்.

சந்திரலேகை கூறிய வார்த்தைகளைக் கேட்ட சந்திரப் பிரபு தன் அருமைக் குமாரிக்கு நேர்ந்த மனக்கஷ்டத்தை எவ்வாறு நிவர்த்திப்பது என்று அல்லும் பகலுமாக யோசித்துத் தன் இஷ்ட தேவதையை நினைத்துப் பிரார்த்தித்த வண்ணம் இருந்தான். இவ்வாறிருக்கையில் அவனது குலகுருவாகிய காலவமுனிவர் அரசனைக் காண வந்தார். முனிவரைக் கண்டதும் அரசன் சிம்மாசனத்தை விட்டு இறங்கி எதிர் கொண்டழைத்து ஆசனத்தில் அமரச் செய்து முறைப்படி உபசரித்துத் தோத்திரித்து வணங்கி நிற்க, அரசனது உள்ளக் குறிப்பை ஞான திருஷ்டியினுல்

அறிந்த முனிவர் அரசனை நோக்கி, அரசனே, நீ இனி வருந்த வேண்டியதில்லை. உன் மகளுக்கு உண்டாயிருக்கிற குஷ்டரோகம் அவள் முன் பிறவியில் செய்த தீவினையின் பயனாலேதான்; அதே பிறவியில் அவள் செய்த தீவினையின் பயனால் தான் தன் புருஷனாலும் வெறுத்து விலக்கப் பட்டிருக்கிறாள். அவள் கஷ்டப்பட வேண்டிய காலம் முடிந்து தன் கணவனுடன் முன்போல் சந்தோஷமாக வாழ வேண்டிய காலம் சமீபத்திலேயே இருக்கிறது.

ஆகையால் நீ காலதாமதம் செய்யாமல் பாகுகனை அழைத்து வந்து ராச்சியபாரத்தை அவனிடம் ஒப்புவித்து, உபய காவிரிக்கு மத்தியில் பூர்வ காலத்தில் மாதலியினால் நிர்மாணிக்கப்பெற்று தேவர்களும் முனிவர்களும் அடிக்கடி வந்து வணங்கிப் பேறுபெறும் மாதலீசுவரரைத் தரிசித்து உன் பத்தினியுடனும் உன் குமாரி வராங்கியுடன் ஒரு மண்டலம் அங்குள்ள கந்தர்வ தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பர்க்கேசுவரம் என்றும் உத்தரஹாலாஸ்யம் என்றும் சொல்லப்படுகிற அந்த மாதலீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் அபயங்கரதேவருக்கும் மாதலீசுவரருக்கும் அபிஷேக ஆராதனைகள் நடத்தி அந்த க்ஷேத்திரத்திலேயே ஆதுலர்க்கு சாலை, ஓதுவார்க் குணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்கு வாயுறை, ஐயம், சிறைச்சோறு, தின் பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ் சுடுதல், அறவைத் தூரியம், சுண்ணம், நோய் மருந்து, வண்ணான், நாவிதன், கண்ணாடி, காதோலை, கண் மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர் துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், சோலை, ஆவிரிஞ்சுதறி,

விலங்கிற் குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் என்னும் முப்பத்திரண்டு தானங்களையும் செய்துவிட்டு வரும்படி உபதேசம் செய்தருளினர்.

குருவின் உபதேசத்தைக் கேட்ட சந்திரப்பிரபு அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து முனிவர் கூறிய படியே தன் மருமகனுகிய பாகுகனை அழைத்து ராச்சியத்தை ஒப்புவித்து, தன் பத்தினியுடனும் புத்திரியுடனும் வேண்டிய திரவியங்களை எடுத்துக் கொண்டு சென்று அவர் உபதேசித்தபடியே கந்தர்வ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அபயங்கரரையும் மாதலீசுவரரையும் வணங்கி, தானங்கள் பலவற்றையும் செய்து, தன் தேசம் திரும்பிச் சென்றான். பிறகு வராங்கியின் குஷ்டநோய் வரவர நீங்கி முன்னினும் அதிசௌந்தர்யமுள்ளவளாய் விளங்கினள். பாகுகன் ஒருநாள் வராங்கியின் அந்தப்புரம் செல்ல அவள் அவனை அன்புடன் அழைத்து உபசாரஞ் செய்து தன்னுடன் அங்கேயே வசிக்கும்படி வேண்டிக் கொண்டாள். பாகுகன் அதற்குச் சம்மதித்து அங்கேயே தன் மனைவியுடன் சுகமாக வாழ்ந்திருக்கும்போது முனிவர் வாக்குப்படி அபயங்கரதேவர் ஸ்ரீமாதலீசுவரர் கிருபையால் வராங்கி பல புத்திர புத்திரிகளைப் பெற்று, சுகமாக வாழ்ந்து வருவதைக் கண்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனாய் நீதி தவருமல் செங்கோல் செலுத்தி வந்தான்.

பிறகு சந்திரப்பிரபு தன் எண்ணம் நிறைவேறியதைக் கொண்டு திருப்தியடைந்து தன் இராஜ்ஜியத்தைப் பாகுகனிடம் ஒப்புவித்து விட்டு சிலகாலம் தன் பத்தினியுடன் சுகமாக வாழ்ந்திருந்து பிறகு இருவரும் விண்ணுலகம் எய்தினர்.

இவ்வாறு காலவமுனிவர் சொல்லியபடியே சந்திரப் பிரபு என்னும் அரசன் அனுஷ்டித்துச் சுகமடைந்தான் என்று சூதமுனிவர் கூறியவுடன் சௌனகாதிமுனிவர்கள் அபயங்கரதேவர் மாதலீசுவரர் இவர்களுடைய பிரபாவத்தையும் அந்த க்ஷேத்திர மகிமையையும் மேலும் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் மகாசாஸ்தாவின் பிரபாவத்தைக் கூறத் தொடங்கினர்.

---

## 10-வது அத்தியாயம்.
## மகா சாஸ்தாவின் வரலாறு.

---

ஒரு சமயம் கயிலாசத்தில் ஸ்ரீ பரமசிவன் தமது தேவியாராகிய பார்வதி தேவியுடனும் கணேசர், ஸ்கந்தர் முதலியோருடனும் வீற்றிருந்தருளும்போது ஒரு திருவிளையாடல் செய்யத் திருவுளங் கொண்டு ஸ்ரீமகா விஷ்ணுவை நினைத்தார். உடனே மகாவிஷ்ணு ஸ்ரீதேவியுடனும் பூதேவியுடனும் கருட வாகனத்தில் எழுந்தருளி வந்து வணங்கித் துதித்துத் தம்மை அழைத்த காரணத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார். உடனே பரமசிவன் திருமாலைத் தனியாக ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, திருப்பாற்கடல் கடைந்த ஞான்று உண்டான அமுதத்தை மோகினி ரூபமெடுத்து தேவாசுரர்களுக்கு கொடுக்கும்போது அசுரர்கள் உம்மைக் கண்டு அமுதம் வேண்டாம் நீர் தான் வேண்டும் என்று கூறினார்களே அந்த மோஹனவதாரத்தை இப்போது எடுக்கவேண்டும்

என்று ஆக்ஞாபித்தார். அவ்வார்த்தைகளைக் கேட்ட மகா விஷ்ணு, சிரித்துப் புரமெரித்த சிவபெருமானே, காமனை எரித்த கண்ணுதற் கடவுளே, பாலனுயிரைக் காக்கக் காலனை உதைத்தீர்; தாருகாவன ரிஷிகள் ஏவிய மான், மழுவைக் கைகளில் ஏந்தினீர்; அவர்களால் ஏவப் பெற்ற யானையை யுரித்துப் போர்த்தீர்; இன்னும் நீர் செய்தருளிய பராக்கிரமச் செயல்கள் சொல்லில் அடங்கா. ஆயினும், என்னுடைய மோஹன அவதாரத்தைக் கண்டால் என்னைப் பின் தொடர்ந்து வருவீர். ஆகையால் தேவியை இடப்பாகங் கொண்ட தேவரீர் இங்ஙனம் கூறுதல் தகாதென மறுத்துக் கூறினர்.

சிவபெருமான் திருமால் மறுத்துக் கூறின வார்த்தைகளைக் கேட்டுச் சாந்தியடையாமல் தம்முடைய விருப்பத்திற்கு மாறாகக் கூறலாகாதெனவும் தாம் அந்த மோஹன அவதாரச் சிறப்பை மறுபடியும் காண விரும்புவதாயும் கூறினர். உடனே திருமால் சிவபெருமானுடைய ஆக்ஞைக்கிணங்க அந்த க்ஷணமே தமது லீலையினாலே சௌந்தரிய சாகரத்திலே உதித்த பூரணசந்திரன் போன்ற திருமுகமும் சகல சாமுத்திரிக லக்ஷணமுங் கூடிய மற்றை அவயவங்களுடனும் கூடிய மோகன ரூபத்தையும் தோற்றுவித்தார். சிவபெருமான் அந்த மோஹினி ரூபத்தையும் தமக்கு எதிரில் நிற்கின்ற சங்கு சக்கர பாணியான திருமாலையும் மாறிமாறிப் பார்த்து அந்த மோகினி ரூபத்தை வேறொரு ஸ்திரீ என்று நினைத்து அவளுடைய அழகின் வசப்பட்டவர் போன்று அவளைப் பின் தொடர அவள் அங்கிருந்த ஒரு சோலையை அடைந்தாள். சிவபெருமான் அங்கு சென்று அவளுடன்

உரையாடி அவளைக் கூடியவுடனே மோகன ரூபத்துடன் விளங்கிய அந்த ஸ்திரீயினிடமிருந்து ஒரு குழந்தை பிறந்தது. உடனே திருமால் தமது லீலையால் எடுத்த மோகினி ரூபத்தை விடுத்து சங்கு சக்கரபாணியாய்த் தோன்றி, சிவபெருமானை நோக்கி, நமது இருவர் சேர்க்கையாலும் தோன்றிய இக்குமாரனுக்கு ஹரிஹரபுத்திரன் என்னும் நாமமும் மற்றும் வேண்டிய வரமும் அளித்துக் கடாக்ஷித்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்.

உடனே சிவபெருமான் அக்குழந்தை கோடி சூரியப் பிரகாசத்துடன் ஜடாமண்டலதாரியாய் வெண்பட்டாடை தரித்து கருணையே உருண்டு திரண்டு ஓர் வடிவமாய் விளங்கும் திருமேனியை அடையும்படி கடாக்ஷித்தருளினார். சிவபெருமான் ஆக்ஞைப்படியே விளங்கிய ஹரிஹரபுத்திரர் அகிலாண்டகோடிகளீன்ற அன்னையாகிய பார்வதி தேவியை வலம் வந்து அடிபணிந்தார். உடனே பார்வதி தேவியார் இவர் வரலாற்றை அறிந்து தமது திருக்கரங்களால் வாரி எடுத்து, மார்போடணைத்து, உச்சி மோந்து, ஏ பாலனே! நீ மகா சாஸ்தா என்னும் பெயருடன் விளங்கி பூரணி, புஷ்கலை என்னும் சத்திகளுடன் கூடி, பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தவலோகம், மகாலோகம், சத்தியலோகம், அதலம், விதலம் சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம் ஆகிய ஈரேழு லோகங்களையும் உனது ஆட்சிக்குட்படுத்தி அங்குள்ளவர்களுக்கு யாதொரு குறைவும் உண்டாகாதபடி காவல் செய்து வருவாயாக என்று கூறி யானை, தேர், பரி, சிவிகை முதலிய வாசனதிகளையும் வில், வாள், கம்பு, ஈட்டி, தோமரம், சூலம் முதலிய ஆயுதங்கள் ஏந்திய பூதப்

படைகளையும் சிவபெருமான் குறிப்பின்படி கொடுத்து ஆசீர்வதித்தார். உடனே மகா சாஸ்தாவானவர் மகா விஷ்ணுவையும் சிவபெருமானையும் பணிந்து விடைபெற்றுக் கொண்டு பஞ்ச துந்துபிகள் முழங்கவும், சுருட்டி, வெண் குடை முதலிய சகல விருதுகளுடனும் தமது பூதப்படை சூழப் புறப்பட்டு இப்பூவுலகுக்கு வந்து உபய காவிரி களின் மத்தியில் உத்தர காவிரிக்குத் தென்கரையில் பர்க்க முனிவருக்குண்டான அச்சத்தைத் தீர்த்த அபயங்கர தேவரும் மாதலியினுல் பூசிக்கப் பெற்ற மாதலீசுவரரும் எழுந்தருளியிருப்பதும் சித்திரசேனனுகிய கந்தர்வனும் அவள் பத்தினியாகிய மஞ்சுகோஷையும் உரோமசரை நிந்தித்ததால் ஏற்பட்ட சாபம் நீங்கப்பெற்று அவர்கள் வேண்டுகோளின்படி உத்தரஹாலாஸ்யம் (வடமதுரை) எனப்பெயர் பெற்றதுமான மாதலீபுரத்தையடைந்து அந்த க்ஷேத்திரத்தின் வனப்பைக் கண்டு தாம் வீற்றிருப்பதற்கு ஏற்ற இடம் இதுவே என்று தீர்மானித்து தேவதச்சனை நினைத்த மாத்திரத்தில் அவன் வந்து குறிப்பறிந்து நிர்மாணித்த கோயிலில் வீற்றிருந்து கொண்டே தம்மை நினைத்தவர்களுக்கும், துதித்தவர்களுக்கும், வந்தடைந்து வணங்கியவர்களுக்கும் எங்கெந்த க்ஷேத்திரத்தில் எவரெவர் அவரைப் பிரதிஷ்டை செய்து வணங்குகிறுர்களோ அவர்களுக்கு அங்கங்கேயிருந்து அருள் செய்து வருகின்றுர் என மகா சாஸ்தாவின் வரலாற்றைக் கூறினுர்.

இவ்வாறு சூதமுனிவர் கூறிய மகா சாஸ்தாவின் வரலாற்றைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் சூத முனிவரை நோக்கி முனிசிரேஷ்டரே நீர் கூறிய மகா சாஸ்தாவின் வரலாற்றைக் கேட்டுப் புளகாங்கிதம்

அடைந்தோம். அந்த மகா சாஸ்தாவை வணங்கிப் பேறு பெற்றவர்களையும் கூறி எங்களை உய்விக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். உடனே சூதமுனிவர் அவர்களை நோக்கி முனிவீர்காள் அந்த மகா சாஸ்தாவை வணங்கிப் பேறு பெற்றவர்கள் அநேகர். அவர்களில் நீலன் என்னும் ஓர் பக்தன் அருள் பெற்ற வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள் என்று கூறிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்.

---

## 11-வது அத்தியாயம்.

## நீலனுக்கு மகா சாஸ்தா அருள் செய்த வரலாறு.

:O:

முன் ஒரு காலத்தில் மாதலீபுரத்தில் நீலன் என்ற பெயர் கொண்ட பஞ்சமன் ஒருவன் வசித்து வந்தான். அவன் இழிந்த ஜாதியிற் பிறந்தவனாயிருந்தும் பூர்வ ஜன்ம புண்ணிய வசத்தால் ஈசுவர பக்தி ஒன்றே மனிதன் கடைத்தேற வழி என்பதை யுணர்ந்து அதற்கேற்பத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். அவன் அதிகாலையில் எழுந்து காவிரி நீர்த் துறையில் நீராடி, சுத்த வஸ்திரம் தரித்து விபூதியணிந்து அந்த க்ஷேத்திரத்திலெழுந்தருளி யிருக்கும் மகா சாஸ்தாவின் சன்னிதியிற் சென்று அவரை வணங்கிக் கோயிலை வலம் வந்து துதித்துப் பின்பு வீடு சென்று தனக்குக் கிடைத்த உணவை அவ்வேங்கட தேவராகிய அம்மகா சாஸ்தாவுக்கு அர்ப்பணித்து, பிறகு தான் உண்டு தன்னுடைய வேலைக்குச் செல்வது வழக்கம். அவனுக்குத் தாய், தந்தை, உற்றார், உறவினர் ஒருவரும்

இல்லாதபடியால் அவ்வூரையடுத்த ஓர் இடத்தில் தன் யஜமானனுடைய விளை நிலங்களுக்குக் காவலாக ஒரு குடிசை யமைத்துக் கொண்டு அதிலே வசித்து வந்தான்.

அக்காலத்தில் ஒரு பிராமணனும் அவன் பத்தினியும் தங்களின் துர்நடத்தை காரணமாக அவர்கள் இருந்த ஊர் ஜனங்களினாலும், பந்துமித்திரர்களாலும் விலக்கப்பட்டு மாதலீபுரத்தை யடைந்து அங்கிருந்து கொண்டு பிழைப்புக்கு வழி தேடிக் கொண்டிருந்தார்கள். அதை அறிந்த அந்த ஊர் ஜனங்கள் மகா தர்மசாலிகளானபடியால் அகதியாய்ப் பிழைப்புத் தேடி வந்த அந்த பிராமணர்களை ஆதரித்து அவர்கள் தங்கியிருப்பதற்கு ஒரு வீடும் அமைத்துக் கொடுத்தார்கள்.

அவர்கள் அவ்விடம் இருந்து வருகிறபோது அந்தப் பிராமண ஸ்திரீ மிகவும் துர்நடத்தையுள்ளவளாயிருந்தபடியால் தன் புருஷனை அலக்ஷியமாக நினைத்துப் பர புருஷர்களை அடைய எண்ணித் தன்னுடைய அழகில் அந்த ஊர் இளைஞர்கள் மயங்கும்படியாகத் தன்னை அலங்கரித்துக் கொள்வதும் அவர்களுடன் சல்லாபமாக உரையாடுவதுமாக இருந்தாள். ஆனால் அந்த ஊரிலுள்ள நான்கு வருணத்தோரும் மற்றையவர்களும் மிகவும் கற்றறிந்தவர்களாயும் அதற்கேற்ப நல்லொழுக்கமுடையவர்களாயும் இருந்தபடியால் அவளுடைய வலையிற் சிக்காமல் போகவே அவள் மிகுந்த ஏமாற்றமடைந்தவளாய் இருக்கும்போது, அவர்கள் வீட்டுக் கொல்லைக்குச் சமீபமாகவே ஒரு குடிசையில் நீலன் என்னும் சாம்பான் வசித்து வருவதைக் கண்டு அவனுடைய இளமைப்

பருவத்தையும் அழகையும் கண்டு எப்படியாவது அவனை அடைய வேண்டுமென்று எண்ணி, அவன் தன் எஜமான் வீட்டுக்குப் போகும்போதும் வரும்போதும் தன் வீட்டில் மிகுந்திருந்த போஜனம், தின்பண்டம் முதலியவைகளைக் கொடுத்து வந்தாள். அந்நீலன் யாதொரு வஞ்சகமும் அறியாதவனுதலால் அவள் கொடுத்த உணவை வாங்கி உண்டு அவளைப் போற்றி வந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தப் பிராமண ஸ்திரி, மன்மத பாணத்தால் மதிமயங்கி தன் அறிவிழந்து தன் குலப் பெருமையை மறந்து தன் பர்த்தாவுக்குத் துரோகம் செய்து ஒருவரும் அறியாமல் தான் விரும்பிய நீலன் வசிக்கும் குடிசையுட் புகுந்தாள். அங்கு அரை நித்திரையில் இருந்த நீலன் திடுக்கிட்டெழுந்து அந்தப் பிராமண ஸ்திரியைக் கண்டு அடிபணிந்து தாயே தாங்கள் வருவதற்கு சிறிதும் யோக்கியம் இல்லாத இந்தக் குடிசைக்குள் வந்த காரணம் என்ன என்று கேட்டான். அந்த ஸ்திரீ தன் காமவேதனையைக் கூறித் தன்னைப் புணர வேண்டுமென்று கூறினள். உடனே நீலன் தன் இரு செவிகளையும் கையினுல் பொத்திக் கொண்டு தாயே தாங்கள் இவ்விதம் கூறுதல் தகாது. தாங்களோ வெகுகாலம் தவம் செய்து இந்தப் பிராமண குலத்தில் பிறந்திருக்கிறீர்கள். நானே முன் செய்துள்ள தீவினை வசத்தால் இந்த இழிந்த குலத்தில் பிறந்திருக்கிறேன். நீங்கள் விரும்பும் இச்செய்கை தகாது. இவ்விஷயத்தை ஜனங்கள் அறிந்தால் நம்மை இவ்வூரை விட்டே துரத்தி விடுவார்கள். மேலும் அரசன் அறிந்தால் நம்மைச் சிரசாக்கினை செய்து விடுவான். ஆகையால் பிறர் அறியாவண்ணம் இவ்விடமிருந்து சென்று விடுங்கள்

எனப் பலவாறு கூறினன். ஆனல் அந்தப் பிராமண ஸ்திரீ அவ்வார்த்தைகளைக் கேட்டும், மதிமயக்கத்தால் அவனை நோக்கி, இப்போது நீ என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யா விட்டால் நீயே என்னைத் தூக்கி வந்து பலாத்காரம் செய்வதாய்க் கூச்சலிட்டு உனக்கு இராஜ தண்டனை கிடைக்கும்படி செய்வேன் என அச்சுறுத்தினள். இவ் வார்த்தைகளைக் கேட்ட நீலன் தன் இஷ்ட தெய்வமாகிய மகா சாஸ்தாவை மனத்தினல் நினைத்து, வேங்கடதேவரே, இந்தப் பாபத்திற்கு நான் ஆளாக வேண்டியிருக்கிறதே என் செய்வேன்; உன் கருணை இருந்தவாறு என்னே என்று துதித்து நிற்க, அந்தப் பிராமண ஸ்திரீ அவனைக் கட்டியணைத்து ஆலிங்கனம் செய்து தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொண்டாள். அதுமுதல் அந்தப் பிராமண ஸ்திரீ நீலனுடைய குடிசைக்கு தினந்தோறும் போய்க் கொண்டிருந்தாள்.

இவ்விஷயத்தை அறிந்த அந்த ஊர் ஜனங்கள் அந்தப் பிராமணனையும் அவன் மனைவியையும் தூற்றி அவர்களை அவ்வூரை விட்டுத் துரத்த எண்ணங் கொண்டவர்களாய் இருந்தார்கள். அந்தப் பிராமணன் தன் மனைவியின் துர்நடத்தை காரணமாகத்தனக்கு ஏற்பட்ட அவமானத் தால் அவளையும் நீலனையும் கொலை செய்ய நினைத்து, ஒரு நாள் அவர்கள் இருவரும் நீலனுடைய குடிசைக்குள் இருப்பதை அறிந்து ஒரு அரிவாளை எடுத்துக் கொண்டு அவ்விடம் சென்றான். நீலன் பிராமணன் வந்ததை அறிந்து அவரை நமஸ்கரித்து ஓ பிரம்மஸ்ரேஷ்டமரே! நான் செய்த பாபத்திற்காக இயமதர்மராஜனுடைய தண்டனைக் காளாகாமல் நீரே உம்முடைய கையினல் என்னைக் கொலை

செய்து விடும். இதுவே எனக்குத் தண்டனையாகும் நானும் நான் செய்த பாபத்திலிருந்து விடுதலை யடைவேன். உமது மனைவியை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கூறித் தன் கழுத்தை வெட்டும்படி குனிந்து நின்றான். பிராமணன் தான் கொண்டு வந்த அரிவாளினாலேயே தான் நினைத்துவந்தபடியே செய்து விட்டுத் தன் பத்தினி யுடன் வீடு சென்றான். பிறகு கொஞ்ச காலம் சென்று அந்த பிராமண ஸ்திரி இறந்த பிறகு இயமதூதர்கள் அவளைக் கொண்டு போய் அவள் செய்த பாபகாரியத் திற்காக நரகத்தில் தள்ளி இம்சித்தார்கள்.

இஃது இங்ஙனமிருக்க, நீலனுடைய உயிரைக்கொண்டு போவதற்காக இயமதர்மராஜனால் அனுப்பப்பட்ட தூதர்கள் அவனை நெருங்க முடியாமல் தூரவே நின்று கொண்டிருந்தார்கள். அந்தப் பிராமணனால் துணிக்கப் பட்ட நீலனுடைய சிரசு அவ்விடத்திலிருந்து புறப்பட்டு அந்த க்ஷேத்திரத்தில் வீற்றிருந்தருளுகின்றவரும் தான் அந்தரங்க சுத்தியாய்ப் போற்றி வந்தவருமான மகா சாஸ்தாவின் சன்னிதியின் முன் சென்று வணங்கியது. உடனே மகா சாஸ்தா அதற்குத் திருவருள் செய்து, நீலனே நீ இந்தச் சிரசுடனேயே நம் சன்னிதியில் இருப்பாயாக. உன்னை வந்து வணங்கிப் பூசிக்கின்றவர் களுக்கும் அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுப்பாயாக என்று ஆசீர்வதித்து அருளினர்.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இயம தூதர்கள் இருவரும் சென்று தர்மராஜனின் அடிபணிந்து நடந்த விஷயங்களைக் கூறினர்கள். இயமதர்மராஜனும்

அவர்களுக்கு மகா சாஸ்தாவின் வரலாற்றைக் கூறி அவருடைய பக்தர்களிடம் செல்ல வேண்டாமென்று ஆக்ஞாபித்தான்.

நீலனது வரலாற்றைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் மேலும் சூதமுனிவரை நோக்கி, முனி சிரேஷ்டரே இதுவரையில் தாங்கள் முதல் மூன்று யுகங்களிலும் மாதலீபுர க்ஷேத்திர மகிமையையும் அங்கு ஸ்ரீமந் நாராயணனையும் ஸ்ரீபரமேசுவரனையும் பூசித்துப் பேறு பெற்றவர்களின் விபரத்தையும் கூறினீர்கள். மேலும் கலியுகத்தில் இதன் பெருமை எவ்வாறிருக்கும் அப்போது யார்யார் பூசிப்பார்கள் என்று கேட்க, திரிகாலங்களையும் உணர்ந்தவரான சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

---

## 12-வது அத்தியாயம்.

## கலியுகத்தில் மாதலீபுர மகிமை யுரைத்தது.

---:o:---

முனிசிரேஷ்டர்களே கிருத யுகத்தில் 1000 வருடமும் திரேதா யுகத்தில் 500 வருடமும் துவாபர யுகத்தில் 250 வருடமும் பர்க்க முனிவராலும் அந்தந்த யுகங்களின் பிற்காலங்களில் அவரால் நியமிக்கப்பட்டவர்களாலும் பூசிக்கப் பெற்று நித்தியம் நைமித்திகம் முதலிய பூசை நடைபெற்றுவருவதான இந்த மாதலீபுரத்தில் கலியுக ஆரம்பத்தில் அந்த பர்க்க முனிவரே பூமியில் வந்து அவதாரம் செய்து பூசித்து வருவார். அக்காலத்தில் அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அபயங்கரதேவர், மாதலீசுவரர், மகா சாஸ்தா, விநாயகர், காளி முதலியவர்

களுக்கு மகா ராஜாக்களாலும், தர்மவான்களான மகா ஜனங்களாலும் கொடுக்கப்பட்ட பூஸ்திதியைக் கொண்டு ஆராதனைகளும், நித்திய உற்சவம், மாசோற்சவம், வருஷோற்சவம் முதலியவை வெகு சிறப்பாக நடைபெறும்.

அந்த க்ஷேத்திரத்தில் வசிக்கும் ஜனங்களும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும் நல்லொழுக்கமுடைய வர்களாயும் இல்லை என்று கேட்போருக்கு இல்லை என்று சொல்லாத தர்மிஷ்டர்களாகவும் ஈசுவர பக்தியுடையவர் களாயும் இருப்பார்கள். மாத மும்மாரி பெய்து நீர்வளம் நிலவளம் முதலியனவோடு கூடி விளங்கும். ஒவ்வொரு வருணத்தாரும் மற்றைய வருணத்தாரைத் தங்களைப் போலவே மதித்து நடந்து வருவார்கள். அவ்வூர் ஜனங்கள் தங்கள் விவசாயத்திலிருந்து கிடைக்கின்றவற்றில் ஆறில் ஒரு பங்கை அரசனுக்குத் தாங்களே சேர்த்துக் கொடுத்து விடுவார்கள். பிராமணர்கள் வேதம் ஓதுதல் முதலிய அறுவகைத் தொழிலிலும் ஈடுபட்டிருப்பார்களே யன்றி வேறு விஷயங்களில் தங்கள் மனதைச் செலுத்த மாட்டார்கள்.

க்ஷத்திரியர்கள் தங்கள் குடிகளின் நன்மையே முக்கியமெனக் கொண்டு நாட்டை ஆண்டு வருவார்கள். தங்கள் குடிஜனங்களுக்கு தாங்கள், தங்கள் உத்தியோகத்தி லுள்ளவர்கள், கள்வர், காட்டு மிருகங்கள், வேற்று நாட்டினர் முதலியவர்களால் யாதொருதீங்கும் நேரிடாமல் பார்த்து வருவார்கள். வியாபாரிகள் ஜனங்களுக்கு வேண்டிய சாமான்களை வெளி நாட்டிலிருந்து கொண்டு

வந்து அதிக லாபமின்றி சரியான நிறை, அளவு முதலியவைகளை வைத்துக் கொண்டு சொல்ப லாபம் வைத்துக் கொண்டு விற்பார்கள். விவசாயிகளும் நிலத்தில் என்னென்ன விதயான தானியங்கள் எந்தெந்தக் காலத்தில் விளையுமோ அவற்றை உற்பத்தி செய்து தங்களுக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு மீதியுள்ளவைகளை வேறு நாட்டவர்களுக்குக் கொடுத்து உதவுவார்கள். உலகத்தில் தேவாலயங்கள் தோறும் ஆறுகால பூஜையும் நடக்கும். மாத மும்மாரி பெய்யும். யானை முதல் எறும்பு ஈருகவுள்ள சகல ஜீவராசிகளும் சௌக்கியமாயிருக்கும்.

இவ்வாறு இருக்க நூற்றிருபத்தைந்து ஆண்டளவும் பர்க்கமுனிவர் மாதலீபுரத்தில் இருந்து தேவாராதனைகள் நடத்தி விட்டுத் தாம் சுவர்க்கலோக வாசம் செய்யப் போய் விடுவார். பிறகு, கலிபுருஷன் தன் ராஜ்ஜிய பாரத்தை நடத்த ஆரம்பித்து விடுவான். அந்தக் காலத்தில் பிராமணர் வேதம் ஓதுதலை விட்டு விடுவார்கள். அவர்களுக்கு மற்ற வருணத்தவர் வேத ரகஸ்யங்களைக் கூற முற்படுவார்கள். அரசர் நீதி முறை தவறி ஜனங்களிடமிருந்து பலவிதமான வகையில் பணம் வசூலிப்பார்கள். தனவந்தராயுள்ளவர்கள் ஈவு, இரக்கம், தயை, தாக்ஷண்யம் இன்றி பொருளையே பிரதானமாகவும் தங்களுக்காகவே மற்றவர்கள் வாழவேண்டுமென்று நினைத்துத்தம் குடிகளை நிர்ப்பந்தித்து வேலை வாங்குவார்கள். உலகத்தில் உள்ள தேசங்கள் ஒன்றையொன்று பகைத்துப் போரில் இறங்கும். அதனல் ஜனங்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும் மிகுதியாக உண்டாகும். அரசனுக்கும் குடிகளுக்கும் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் முதலாளிகளுக்கும்

தொழிலாளிகளுக்கும் நட்புக் குறைவும், சச்சரவும் ஏற்படும். ஜனங்கள் அவரவர் இஷ்டப்படியே நடந்து வருவார்கள். நாஸ்திகமும் பரவும்.

இந்தக் காலத்தில் ஸ்ரீமந் நாராயணன் கங்கைக்கும் யமுனைக்கும் நடுவில் உள்ள கௌடதேசத்தில் ஒரு பிராமணனுடைய வீட்டில் சுக்கிலபக்ஷம் த்ருதியை திதியில் கல்கி அவதாரம் எடுக்கப் போகிறார். அவர் குதிரைமேல் ஏறி வாளாயுதத்தைக் கையிலேந்தி துஷ்டர்களைச் சம்ஹாரம் செய்யப் போகிறார். இவ்விதமாக ஆறாயிரம் வருஷகாலம் இம்மண்ணுலகத்திலுள்ள துஷ்டர்களைச் சம்ஹரித்தும் சிஷ்டர்களைப் பரிபாலித்தும் வந்து கடைசியில் தகுந்த சிஷ்யர்கள் மூலமாக வேதாகமங்களை உலகத்தில் வெளிப்படுத்தும்படிச் செய்யப் போகிறார்.

உலகத்திலுள்ளவர்கள் இவ்வாறு கதிகலங்கித் தடுமாறும் காலத்திலுங்கூட இந்த மாதலீபுர க்ஷேத்திர வாசிகளானவர்கள் யாதொருவிதமான கஷ்டமுமில்லாமல் அவர்களுடைய பக்தி விசுவாசத்தாலும் தேவகடாக்ஷத்தாலும் யாதொரு குறைவில்லாமல் ஸ்ரீ அபயங்கர தேவருக்கும் ஸ்ரீ மாதலீசுவரருக்கும் எவ்வகையிலும் லோபமில்லாமல் பூசை நடத்தியும் அந்த க்ஷேத்திர மகிமையைப் பாராயணம் செய்து கொண்டும் யாத்திரை வாசிகளாக அங்கு வருபவர்களுக்கு உபசாரம் செய்வதிலும் ஈடுபட்டு, சௌக்கியமாய் வாழ்ந்து வருவார்கள்.

இந்தப் புராணத்தை வருஷந்தோறும் நியமமாய்ப் பாராயணம் செய்கிறவர்கள் புத்திர சம்பத்தைப் பெறுவார்கள். இந்த க்ஷேத்திர புராணத்தைப் படனம் செய்தவர்களும் கேட்டவர்களும் தனம், தான்யம் முதலிய 16 பேறுகளையும் பெறுவார்கள். இந்த க்ஷேத்திர மகாத்மியம் எழுதிய ஏடு ஒன்று யாவர் வீட்டில் இருந்தாலும் அவர்களுக்கு கிரகதோஷம் ஏற்படாது.

நீங்கள் மகா பக்தர்களானபடியால் உங்களுக்கு இவ்விஷயத்தைக் கூறினேன் என்று சொல்லி நைமிசாரண்யமுனிவர்களை ஆசீர்வதித்துச் சூதமாமுனிவர் தன் இருப்பிடம் சென்றார்.

இவ்விருத்தாந்தங்களைக் கேட்டுக் கொண்டிருந்த சௌனகாதி முனிவர்கள் அந்த க்ஷேத்திரத்தின் மகிமையைப் பலவாறு புகழ்ந்து பாடிக் கொண்டு தாங்களும் சென்று ஸ்ரீ அபயங்கர தேவரையும் மாதலீசுவரரையும் வணங்க வேண்டுமென்று விரும்பித்தனே மற்ற முனிசிரேஷ்டர்களையும் அழைத்துக் கொண்டு மாதலீசுவரம் செல்லப் புறப்பட்டார்கள்.

முற்றும்.

109665